Registered as a NewsPaper

விலை ரூபா : 8.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 2036 | ஆடி-03 | 19-07-2005 | செவ்வாய்க்கிழமை | ஓசை-151


S.M கோல்ட் ஹவுஸ்
வவுனியா நகரில் அசல் 22 கரட் தங்க நகைகளை உங்கள் விருப்பத்திற்கேற்ப தெரிவு செய்து பெற்றுக்கொள்ள
S.M கோல்ட் ஹவுஸ்
இல:-46A, தர்மலிங்கம் வீதி, வவுனியா.
உரிமையாளர்:- S.M.சண்முகரத்தினம்.
T.P: 024-222 4247 (சி-12150)

# தமிழ் மக்களின் சுதந்திரவாழ்விற்கு சர்வதேசமே பொறுப்பேற்க வேண்டும்!

## வலியுறுத்தி யாழ். இல் போராட்டங்களுக்கு ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

**தமிழ் மக்களை தன்னாட்சி, சுயநிர்ணய உரிமைகளுடன் வாழ்வதற்கும் தமது அடிப்படை உரிமைகளைப் பெறுவதற்கும் இயல்பு வாழ்க்கையை நிலைபெறச் செய்வதற்கும் சர்வதேச நாடுகளே பொறுப்பாகும் என்பதை சர்வதேச சமூகத்திற்கு உணர்த்தும் முகமாக மக்கள் போராட்டங்களை பரந்த முறையில் முன்னெடுப்பதென தீர்மானிக்கப்பட்டுள்ளது.**

தற்போதைய நாட்டின் சூழ்நிலை சம்பந்தமான கலந்துரையாடல் நேற்று பகல் 11 மணியளவில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெற்றது. யாழ்மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் சொலமன் சூ.சிறில் தலைமையில் இடம் பெற்ற இந்நிகழ்வில், யாழ் மாவட்ட பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், தொழிற் சங்கப் பிரதிநிதிகள் என பல நூற்றுக் கணக்கான பிரமுகர்கள் கலந்து கொண்டார்கள்.

தலைவர் உரையைத்

(12ஆம்பக்கம் பார்க்க)


(41)

## மிருசுவில் மருத்துவமனைக்கு அருகில் கிளைமோர் குண்டு கண்டுபிடிப்பு!

(தென்மராட்சி)

மிருசுவில் மருத்துவமனைக்கு அருகில் உள்ள குளப்பகுதியில் இருந்து நேற்று மதியம் சக்தி வாய்ந்த கிளைமோர் குண்டு ஒன்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இது குறித்து தெரிவித்த இப்பகுதி மக்கள், நேற்று முன்தினம் இரவு முழுவதும் இப்பகுதி எங்கும் நாய்கள் குரைத்ததாகவும், படையினரின் நடமாட்டம் காணப்பட்டதாகவும், காலையில் குளத்திற்குச் சென்ற ஒருவரே குண்டு ஒன்று கிடக்கக் கண்டதாகவும் பின்னர் இப்பகுதியில் குவிந்த படையினரும் பொலிசாரும் 12 மணியளவில் இக்குண்டை எடுத்து வெடிக்க வைத்ததாகவும் கூறுகின்றனர். (28)

## வவுனியாவில் ஆயுதக்குழு நடமாட்டம் அதிகரிப்பு கண்காணிப்புக் குழுவிடம் ஞானம் முறைப்பாடு

(செட்டிகுளம்)

வவுனியாவில் ஆயுதக் குழுக்களின் நடமாட்டம் அதிகரித்து இருப்பதாகவும் இதன் காரணத்தினால் வவுனியாவில் அரசியல் பணியில் ஈடுப்பட்டு இருக்கின்ற போராளிகளுக்கு பாதுகாப்பற்ற சூழ்நிலை தோன்றி இருப்பதாகவும் வவுனியா மாவட்ட அரசியல் துறைபொறுப்பாளர் ஞானம் மீண்டும்வவுனியா போர்நிறுத்த கண்காணிப்புக்குழுவுக்கு முறைப்பாடு தெரிவித்துள்ளார்

நேற்று மாலை ஐந்து மணியளவில் வவுனியா போர் நிறுத்த கண்காணிப்புக் காரியாலயத்தில் வவுனியா மாவட்ட போர்நிறுத்த கண்காணிப்புக் குழுத் தலைவரை சந்தித்த வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் ஞானம் இராணுவக் கட்டுப்பாட்டு பகுதியில் அரசியல் பணி செய்துவரும் போராளிகளுக்குப் பாதுகாப்பினை ஏற்படுத்துமாறும் புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகா

(12ஆம்பக்கம் பார்க்க)

## சிறிலங்கா அமைச்சரவையில் மாற்றம் ஜே.வி.பி யின் அமைச்சுக்களுக்கு புதியவர்கள்

(கொழும்பு)

ஜே. வி. பி யின் அமைச்சர்கள் அரசாங்கத்தில் இருந்து விலகியமையை அடுத்து நேற்றுஅரசாங்க அமைச்சரவையில் புதிய மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன

இதன்படி ஐந்து அமைச்சரவை அதிகாரமுள்ள அமைச்சர்களும் ஒரு அமைச்சரவை அதிகாரமில்லாத அமைச்சரும் ஆறு பிரதி அமைச்சர்களும் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் நேற்றுப் பகல் சனாதிபதியின் முன்னிலையில் தமது சத்தியபிரமாணங்களை செய்து கொண்டனர்.நீர்வடிகால் அமைப்பு மகாவலி ரஜரட்ட அபிவிருத்தி அமைச்சராக மைத்திரிபால சிறிசேன பதவியேற்றார்.

மில்ரோய் பெர்னாண்டோ கடற்றொழில் நீரியல் வள மற்றும் கிறிஸ்தவ துறை அமைச்சராக பதவியேற்றார். காணி மற்றும் சுதேச வைத்தியத்துறை அமைச்சராக திஸ்ஸ கரலியத்த பதவியேற்றார்.

எஸ். பி நாவின்ன சிறுகைத் தொழில் மற்றும் கிராமிய கைத் தொழில்துறை அமைச்சராக பதவியேற்றார்.சி.பி ரட்நாயக்க நடுத்தர, சிறிய பெருந்தோட்ட கைத்தொழில், கிராமிய மனித வள அபிவிருத்தி மற்றும் கால்நடைத்துறை அமைச்சராக பதவியேற்றார்.

சேகு இஸ்ஸதீன் சிறிய மற்றும் கிராமிய கைத்தொழிலுக்கு உதவும்

(12ஆமபக்கம் பார்க்க)

## பருத்தித்துறை உயர்பாதுகாப்பு வலயத்தில் படையினரால் புத்தர்சிலை அமைப்பு

(பருத்தித்துறை)

பருத்தித்துறைப் பகுதியில் 524ஆவது படையணியினர் நிலை கொண்டுள்ள உயர் பாதுகாப்பு வலயப்பகுதியில் புத்தர்சிலை வைக்கப்பட்டுள்ளமை அப்பகுதி மக்களிடையே விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

இது சம்பந்தமாக இராணுவ உயர் அதிகாரிகளுடன் தொடர்பு கொண்ட போதிலும் முழுமையான பதில் எதனையும் அவர்கள் தரவில்லையெனவும் சம்பந்தப்பட்டவர்கள் தெரிவிக்கின்றார்கள்.

(12ஆம்பக்கம் பார்க்க)

## யுத்தநிறுத்த ஒப்பந்தத்தைப் பாதுகாக்க போராடும் கண்காணிப்புக்குழு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் மீதான சிறிலங்கா இராணுவத்தின் நீடிக்கும் நிழல் யுத்தத்தால் கேள்விக்குறியாகியுள்ள யுத்த நிறுத்த ஒப்பந்தத்தைப் பாதுகாக்க இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.கொழும்பில் சிறிலங்கா சமாதான செயலகப் பணிப்பாளர் ஜெயந்த தனபாலவை போர் நிறுத்த கண்காணிப்புக்குழுத்

(12ஆம்பக்கம் பார்க்க)

## கல்மடுவில் துப்பாக்கிச் சூடு; குடும்பஸ்தர் படுகாயம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டம் வாழைச் சேனைப் பிரதேசம் கல்மடுவில் நேற்று முன்தினம் இரவு குடும்பஸ்தரொருவர் அவரது வீட்டில் இனந்தெரியாத நபர்களினால் சுடப்பட்டு படுகாயமடைந்த நிலையில் மட்டக்களப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். துப்பாக்கிச் சூடுக் காயங்களுக்குள்ளானவர் கணபதிப்பிள்ளை இளையதம்பி (வயது - 40) என்பவராவார்.

இரவு பத்து மணியளவில் வீட்டிற்கு வந்த துப்பாக்கி நபர்கள் இந்தத் துப்பாக்கிச் சூட்டை நடத்தி விட்டு தப்பிச் சென்றுள்ளனர். இது பற்றி கல்குடா பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர்.




## வடமராட்சி கிழக்கில் 'போர் முழக்கம்' பெருமளவில் மக்கள் பங்கேற்பு

(அலுவலகசெய்தியாளர்)

வடமராட்சி கிழக்கு போர் எழுச்சிக் குழுக்களின் ஏற்பாட்டில் வடமராட்சி கிழக்கு மக்கள் ஒன்று திரண்டு நேற்றுக்காலை 10.30 மணிக்கு "போர் முழக்கம்" என்னும் தொனிப்பொருளில் பேரணி ஒன்றை நடாத்தியுள்ளனர்.

மூன்று வீதிகளில் இருந்து ஆரம்பமாகிய பேரணி- தாளையடி பிரதான வீதியில் இருந்து ஒரு பேரணியும், பருத்தித்துறை வீதியிலிருந்து ஒரு அணியும், ஆழியவளை வீதியிலிருந்து ஒரு அணியுமாக நகர்ந்து மருதங்கேணிச்சந்தியில் ஒன்று சேர்ந்தது. அங்கி ருந்து தாளையடி பொது விளையாட்டு மைதானத்தை நோக்கி "போர் நிறுத்தம் போதும் பொங்கி எழுவோம்", "கேட்டுப் பெறமுடியாததை போராடித்தான் பெறவேண்டும்" போரா? சமாதானமா? சமாதானம் வேண்டாம் போருக்கு ஆணையிடுங்கள் என்று மாணவர்கள், ஆசிரியர்கள்,

(12ஆம்பக்கம் பார்க்க)

**வரி விளம்பரம்**

### விற்பனைக்குண்டு

சேவியர் கடைச் சந்திக்கு அருகாமையில் உள்ள இலக்கம் 158, ஆனந்தநகரில் 1/2 ஏக்கர் காணியும், 10ஆம் பண்ணையில் உள்ள 104 இலக்கத்திற்குரிய 2ஏக்கர் காணியும் விற்பனைக்குண்டு. தொடர்புக்கு: எஸ்.குகன். இல-104, 10ஆம் பண்ணை, கனகபுரம். (6365)

### தவறிவிட்டது

நித்தியானந்தராசா- ஜெகசுதா என்பவருடைய தேசிய அடையாள அட்டை 12.07.2005 அன்று கிளிநொச்சி கந்தசுவாமி கோவிலுக்கும் கிளிநொச்சி பஸ் தரிப்பிடத்துக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் பணிமனையில் அல்லது திருநகர், இல-34, வண்றோட் கிளிநொச்சி என்னும் முகவரிக்கு ஒப்படைக்கவும் (6372)


# மழவராயர் கந்தையா நினைவு திருக்குறள் வினாடிவினாப்போட்டி

புத்தூர் ஸ்ரீசோமாஸ்கந்தக் கல்லூரியின் நிறுவுனர் அமரர் மழவராயர் கந்தையா நினைவாக யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கிடையே நடத்தப்படும் திருக்குறள் வினாடி வினாப்போட்டிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. பாடசாலை சார்பாக தரம் 12,13 வகுப்புக்களைச் சேர்ந்த மூவர் கொண்ட குழு இப்போட்டியில் பங்கு பற்றலாம் ஒழிபியலில் முதல் பத்து அதிகாரங்களை உள்ளடக்கியதாகப் போட்டி அமையும்.

போட்டிக்கான விண்ணப்பங்களை எதிர்வரும் 22 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு கோரப்பட்டுள்ளது. போட்டிகளின் முதற்கட்டம் எதிர்வரும் 03.08.2005 புதன்கிழமையும், இறுதிப்போட்டி 05.08.2005 வெள்ளிக்கிழமையும் கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் தலைமையில் இடம்பெறும்.

போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெறும் பாடசாலைகளுக்கும் அதிகூடிய புள்ளிகளை ஈட்டும் மூன்று மாணவர்களுக்கும் செப்ரெம்பர் பத்தாம் திகதியன்று இடம்பெறும். நிறுவுனர் நாள் விழாவில் மிகப் பெறுமதியான பரிசுகள் வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# மாவீரர் குடும்ப கௌரவிப்பும் சமகால அரசியல் கருத்தரங்கும்

(உடையார்கட்டு)

மாவீரர் குடும்பம், எல்லைப்படை மாவீரர் குடும்பக் கௌரவிப்பு நிகழ்வும், சமகால அரசியல் கருத்தரங்கு நிகழ்வும் நாளை இரவு 7.00 மணிக்கு சுதந்திரபுரம் மத்தி பொதுமண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

இதற்கான சகல ஏற்பாடுகளையும் உடையார்கட்டு தேசிய எழுச்சிப் பேரவையினர் மேற்கொண்டுள்ளனர்.இந் நிகழ்வில் நினைவுரைகளும், கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (19)

# கமக்கார அமைப்புக்களின் ஒன்றுகூடல் நிகழ்வு

(உடையார்கட்டு)

விசுவமடு பிரதேச கமக்காரர் அமைப்புக்களின் ஒன்றுகூடல் நிகழ்வு நேற்று உடையார்கட்டு கமநல சேவை நிலையத்தில் இடம் பெற்றது.

இந்நிகழ்வுக்கு விசுவமடுப் பிரதேச கமக்காரக்குழுத் தலைவர் செல்வரத்தினம் தலைமை தாங்கினார்.

விவசாயிகளின் உற்பத்திகளுக்கான நியாயமான விலையை பெற்றுக்கொடுக்க முயற்சித்தல் மற்றும் காலபோக பயிற்செய்கை சம்பந்தமான விடயங்கள் இந்த ஒன்றுகூடலில் ஆராயப்பட்டன.

இந்நிகழ்வில் பெரும்பாக உத்தியோகத்தர் மாதவராசா,விவசாய போதனாசிரியர் விஜி விசுவமடு பிரதேசப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவன இணைப்பாளர் கார்த்திக், மரக்கறி வாணிபப் பகுதி உத்தியோகத்தர் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (19)


## 45 ஆவது நாள் நினைவஞ்சலி

## நாகராசா-இராஜேஸ்வரி

(826 வண்றோட் ,துணுக்காய்)

தோற்றம்.18.05.1975 மறைவு.04.06.2005

என்ன சொல்லி நாம் வரைய எம்
கண்ணீர் கதையுனக்கு-கடல் நீரோ
பேனாமையாக ஊற்றெடுத்தாலும்-எம்மனது
கதை சொல்லி மாறாதம்மா

பண்பில் சிறந்தவளே
பாசத்தில் உயர்ந்தவளே
புண்படுத்தி விட்டெம்மை
போனதேனோ சொல்லம்மா

*அவரது பிரிவால் தவிக்கும் உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரையும் அன்னாரின் 45 வது நாள் வீட்டுக்கிருத்திய நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு வேண்டுகிறோம்.*

தகவல்:-
சி.ஜெயராஜ்
826, விநாயகர் வீதி,
துணுக்காய்.

(சி.12370)


# ஓயாதஅலைகள்-01 வெற்றியின் ஒன்பதாம் ஆண்டு நிறைவுவிழா

(முல்லைத்தீவு)

ஓயாதஅலைகள் -01 வெற்றியின் ஒன்பதாம் ஆண்டு நிறைவு விழா நேற்று முல்லைத்தீவு நகரில் நடைபெற்றது. முல்லைத்தீவு வர்த்தகர் சங்கத் தலைவர் மனோ தலைமையில் நேற்றுக் காலை 9.30 மணிக்கு இந் நிகழ்வு ஆரம்பமானது. இதில் பொதுச்சுடரினை முல்லைத்தீவு கடற்றொழிலாளர் சமாசத் தலைவர் அ.மரியராசா ஏற்றிவைத்தார்.

தமிழீழ தேசியக்கொடியை கடற்புலிகளின் முல்லைத்தீவு மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் மா. நங்கன் ஏற்றிவைத்தார். ஓயாத அலைகள் ஒன்று வெற்றித் தாக்குதல் நினைவாக நிறுவப்பட்ட நினைவுக்கல்லிற்கான மலர் மாலையினை பாராளுமன்ற உறுப்பினர் கனகரத்தினம் அணிவித்தார். இதனைத் தொடர்ந்து ஓயாத அலைகள்-01 தாக்குதலில் வீரச்சாவைத்தழுவிக் கொண்ட 315 மாவீரர்களின் நினைவாக திருவுருவப்படத்திற்கான ஈகச் சுடரினை கனியவன்,கனியவள் ஆகிய மாவீரர்களின் தாயாரான அன்னலட்சுமி ஏற்றிவைத்து, மலர் மாலையினையும் அணிவித்தார்.

இந்த வெற்றிவிழா நிகழ்வில் கடற்புலிகளின் முல்லை நகரத் தளபதி தினேஸ், பாராளுமன்ற உறுப்பினர் கனகரத்தினம், சமாசத் தலைவர் மரியராசா, முல்லைவர்த்தகர் சங்கத்தின் போசகர் சகிலா, வர்த்தகர் சங்க உறுப்பினர் நவநீதன், ஐ.பி.சி செய்தியாளர் கனகரவி ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

இந்த நிகழ்வில் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர், வர்த்தக சங்க உறுப்பினர்கள், பொது மக்கள் என பெருமளவானோர் கலந்து கொண்டனர். (20)


## கேள்வி அறிவித்தல்

## வலயக்கல்வி அலுவலகம்-கிளிநொச்சி

கீழே குறிப்பிடப்பட்டுள்ள வேலைகளுக்கான கேள்வி கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளரினால் 2005 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 02 ஆம் திகதி வரை ஏற்றுக் கொள்ளப்பட்டு, அன்றைய தினமே முற்பகல் 10.30 மணிக்குத் திறக்கப்படும். அச்சமயம் விரும்பும் கேள்விதாரர் அல்லது அவரால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி சமுகமளிக்கலாம்.

| தொ இல | பாடசாலையின் பெயரும் வேலை விபரமும் | மீளளிக்கப்படாத வைப்புப்பணம் | மீளளிக்கப்படும் வைப்புப்பணம் | இக்ராட் இல |
|---|---|---|---|---|
| (01) | கிளி/ புளியம்பொக்கணை நாகேந்திரா வித்தி 100'x25' பாடசாலைக் கட்டடம் அமைத்தல். | 250/- | 2500/- | எம் 7 |
| (02) | கிளி/ வட்டக்கச்சி ம.வி 36'x27' கட்டடத் திருத்தம் | 250/- | 2500/- | எம் 9 |
| (03) | கிளி/ அக்கராயன் ம.வி 120'x25' வகுப்பறை கட்டட மிகுதி வேலை | 250/- | 2500/- | எம் 9 |
| (04) | கிளி/ புனித திரேசா பெண்கள் கல்லூரி 110'x25' இருமாடிக்கட்டட மிகுதி வேலை | 250/- | 2500/- | எம் 9 |
| (05) | கிளி/ பளை மத்திய கல்லூரி கணினி அறை அமைத்தல் | 250/- | 2500/- | எம் 9 |
| (06) | கிளி/ பரந்தன் இந்து ம.வி 120'x25' கட்டடத் திருத்தம் | 250/- | 2500/- | எம் 9 |
| (07) | கிளி/ நாச்சிக்குடா அ.த.க.பா பாடசாலை கட்டடத் திருத்தம் | 250/- | 2500/- | எம் 9 |

01 (அ) மேற்படி வேலைக்கு இக்ராட் (ICRAD) நிறுவனத்தின் 07,09 உம் அதற்கு மேற்பட்ட தரத்திற்கும் பதிவு செய்து கொண்டவர்கள் விண்ணப்பிக்கத் தகுதிபெற்றவர்களாவார்கள்.

(ஆ) பாடசாலை அபிவிருத்திச் சங்கம் தங்களால் இவ் வேலையைச் செய்து முடிக்க முடியுமானால் தங்கள் பாடசலைக்குரிய கேள்விப்பத்திரங்களைப் பெற்று விண்ணப்பிக்கலாம் பாடசாலை அபிவிருத்திச்சங்கத்திற்கு முதலாம் பந்தி (அ) இல் குறிப்பிட்ட சட்ட திட்டமும், மீளளிக்கப்படும் வைப்புப் பணமும் விலக்களிக்கப்பட்டுள்ளது.

02 கேள்விப் பத்திரங்களில் பெறுமதிசேர் வரி (VAT) 15% சேர்க்கப்பட்ட கேள்வித்தொகை பெறுமதி சேர்வரி (VAT) 15% சேர்க்கப்படாத கேள்வித்தொகை என்பன தனித்தனியாகக் குறிப்பிடல் வேண்டும்.

03 மேற்படி வேலைக்கான கேள்விப் பணத்தை கிளிநொச்சி வலயக் கல்வி அலுவலகத்தின் வலயக் கல்விப் பணிப்பாளரின் வங்கிக்கணக்கில் வைப்புச் செய்து அல்லது இக்காரியாலயத்தில் நேரடியாகச் செலுத்தி 2005.07.20 ஆம் திகதியில் இருந்து 01.08.2005 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிவரை கிளிநொச்சி வலயக்கல்வி அலுவலகப் பாடசாலைகள் வேலைகள் கிளையில் பொறியியலாளரிடம் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

04 விண்ணப்பங்கள்யாவும் இரு பிரதிகளில் பூர்த்தி செய்து மூலப்பிரதியும், எம்மால் வழங்கப்படும் ஒப்பந்த நிபந்தனைப் படிவமும் கையொப்பம், இறப்பர் முத்திரை என்பன இடப்பட்டு அவற்றினையும் கேள்விப்பத்திர இணைப்பிரதியினையும் தனித்தனி இரு கடித உறையில் இட்டு, கடித உறையின் இடதுபுற மேற்பக்க மேல்மூலையில் வேலையின் விபரம் எழுதப்படல் வேண்டும். தனிததனியே கடித உறையிலிட்ட இருபிரதிகளையும பிறிதொரு கடித உறையிலிட்டு ஒட்டப்பட்டு ஒப்பந்தகாரரின் முத்திரை இடப்பட்டு ஏ-9 வீதி சிங்கள மாகவித்தியாலயம் கிளிநொச்சி எனும் முகவரியில் அமைந்துள்ள கிளிநொச்சி வலயக் கல்வி அலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியில் 2005 ஆகஸ்ட் மாதம் 02 ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு முன்னராக இடப்படல் வேண்டும் மேற்குறிப்பிட்ட காலத்திற்குப் பிந்திய கேள்விப்பத்திரங்கள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

05 கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பார்வையிடுவதுடன் மேலதிக விவரங்களையும் பாடசாலை வேலைகள் பொறியியலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

ஏ-9 சாலை,
சிங்கள மகாவித்தியாலயம்,
கிளிநொச்சி,

த.குருகுலராஜா.
வலயக் கல்விப்பணிப்பாளர்,
வலயக் கல்வி அலுவலகம்,
கிளிநொச்சி.

(சி.12338)

# ஈராக் முன்னாள் அதிபர் சதாம் மீது முதல் முறையாக கிரிமினல் வழக்கு ஆரம்பம்



(பாக்தாத்)

**சிறைவாசம் அனுபவித்துவரும் ஈராக்கின் முன்னாள் அதிபர் சதாம் ஹுசைன் மீது முதல் முறையாக கிரிமினல் வழக்கு விசாரணை தொடங்கவுள்ளது. இதில் குற்றம் நிருபிக்கப்பட்டால் அவருக்கு மரண தண்டனை கிடைக்க வாய்ப்புள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.**

ஈராக் முன்னாள் அதிபர் சதாம் ஹுசைன் அமெரிக்கப் படையினரால் கைது செய்யப் பட்டு சிறையில் இருந்து வருகிறார்.

சதாம் ஆட்சிக்காலத்தில் 1982 இல் பாக்தாத் நகரிலிருந்து 80 கி.மீ தொலைவிலுள்ள துஜய்ல் என்ற கிராமத்தில் ஷியா பிரிவு முஸ்லிம்கள் ஏராளமானோர் மொத்தமாகக் கொல்லப்பட்டனர். இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பாக சதாம் ஹுசைன் மற்றும் அவரது மூன்று தளபதிகள் மீது குற்றச்சாட்டுள்ளது. இந்நிலையில் ஈராக் சிறப்பு டிரிபியூனல் தலைமை நீதிபதி ரெய்டு ஜுகி கூறுகையில், "இந்தச் சம்பவம் தொடர்பான முதற்கட்ட விசாரணை முடிந்துவிட்டது. இவ்வழக்குத் தொடர்பான நீதிமன்ற விசாரணை விரைவில் தொடங்கப்படவுள்ளது. விசாரணை தொடங்கும் திகதி வரும் ஒரு சில நாட்களில் அறிவிக்கப்படும் என்று கூறினார். சதாம் ஹுசைன் மீதான முதல் கிரிமினல் வழக்கு விசாரணை இது என்பது குறிப்பிடத்தக்கது. இதில் குற்றம் நிருபிக்கப்பட்டால் மரண தண்டனை கிடைக்க வாய்ப்புள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.




ஈராக் தலைநகர் பாக்தாத்திலிருந்து தெற்கே 70 கி.மீ தூரத்தில் உள்ள முஸ்ஸயிப் நகரில் சனிக்கிழமை இரவு நடந்த மனிதவெடிகுண்டுத் தாக்குதலில் 54 பேர் பலியான இடம். மசூதி அருகே நடந்த அத் தற்கொலைத் தாக்குதலில் மேலும் 84 பேர் காயமடைந்தனர்.

## முன்னாள் பிரதமர் மரணம்

(லண்டன்)

பிரிட்டனின் முன்னாள் பிரதமர் சர் எட்வர்ட் ஹீத் நேற்று முன்தினம் மரணமடைந்தார். இவருக்கு வயது 89. கன்சர்வேடிவ் கட்சியைச் சேர்ந்த இவர் 1970 முதல் 1974 வரை பிரிட்டனின் பிரதமராக இருந்தார்.



தைவானைத் தாக்கும் என எதிர்பார்க்கப்படும் ஹைதாங்புயல். இதனை அமெரிக்க விண்கலம் படம் பிடித்து அனுப்பியுள்ளது

## 25 ஆண்டுகளுக்குப் பின்னர் ஈராக் பிரதமர் ஈரான் பயணம்



ஈராக் பிரதமர் இப்ராகிம் ஜாப்ரி, 25 ஆண்டுகளுக்குப் பின் முதல் முறையாக ஈரானுக்குச் சென்றுள்ளார்.

ஈராக் அதிபராக சதாம் ஹுசைன் இருந்தபோது, 1980-ஆம் ஆண்டில் ஈரானுடன் போர் ஏற்பட்டது. இதில் பலர் உயிரிழந்தனர். அன்று முதல் இரண்டு நாடுகளுக்கும் இடையே நல்லுறவு இல்லை. 25 ஆண்டுகளுக்குப் பின் இப்போதுதான் முதல் முறையாக இரு நாடுகளுக்குமிடையே நல்லுறவு மலரத் தொடங்கியுள்ளது.

இதன் முன்னோட்டமாக ஈராக் பிரதமர் இப்ராகிம் ஜாப்ரி 25 ஆண்டுகளுக்குப் பின் முதல்முறையாக ஈரான் சென்றார். இவருக்கு இனிய வரவேற்பு அளிக்கப்பட்டது.

அங்கு அவர் பேசுகையில், இரு நாடுகளுக்குமிடையேயுள்ள உறவு நீண்ட காலமாக இருந்துவரும் ஒன்று என்றும், இந்த நல்லுறவு இரு நாடுகளுக்கும் பயனுள்ளதாகும் என்றும் குறிப்பிட்டார்.




லண்டனில் கிங்ஸ்குரஸ் நிலையப்பகுதியில் அண்மையில் நடந்த குண்டு வெடிப்பையடுத்து காணாமல் போனதாகக்கூறப்படும் பெண்ணின் புகைப்படம் பேருந்து நிலையத்தில் விளம்பரப்படுத்தப்பட்டுள்ளது.

## ஈக்வடோரியல் கினியாவில் விமான விபத்து 55 பேர் பலி;

(மலாபோ)

ஆபிரிக்க கண்டத்திலுள்ள ஈக்வடோரியல் கினியாவில் விமானம் ஒன்று புறப்பட்ட சில நிமிடங்களில் விபத்திற்குள்ளாகி விழுந்து நொருங்கியதில் விமானத்தில் பயணம் செய்த 55 பேரும் பலியாகி இருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

ஆபிரிக்க நாடான ஈக்வடோரில் கினியாவிலின் தலைநகர் மலாபோவில் இருந்து பாடா என்ற நகரத்திற்கு ஈக்வடோர் விமான நிறுவனம் உள்ளூர் விமானசேவையை நடத்தி வருகிறது. கடந்த சனியன்று வழக்கம் போல் மலாபோ நகரத்தில் இருந்து விமானம் புறப்பட்டு பனே என்ற இடத்திற்கு அருகே சென்று கொண்டிருக்கும் போது திடீரென விழுந்து நொருங்கியது.

இது குறித்து ஈக்வடோரில் கினியாவின் துணைப் பிரதமர் ரிக்கார்டோ மேங்கியு ஒபாமா கூறியதாவது, விபத்திற்கான காரணம் குறித்துத் தெரியவில்லை. விபத்தில் இறந்தவர்கள் குறித்து தெளிவான தகவல் எதுவும் கிடைக்கவில்லை. இது மிகவும் மோசமான விபத்து. விபத்தில் இருந்து யாரேனும் தப்பினார்களா என்பது குறித்தும் தகவல் இல்லை. விமானத்தில் ஆறு விமானப்பணியாளர்கள் உட்பட 55 பேர் பயணம் செய்தனர் என்றார்.

விமானத்தில் 80 பேர் பயணம் செய்ததாக உள்ளூர் செய்தி நிறுவனங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. இது குறித்து உறுதியான தகவல்கள் எதுவும் வெளியாகவில்லை. விபத்திற்குள்ளான விமானத்தைக் கண்டறியும் பணியில் இராணுவ உலங்குவானூர்தி ஈடுபடுத்தப்பட்டுள்ளது. விபத்துக் குறித்து விசாரணை நடத்த புலனாய்வு அதிகாரிகள் அடங்கிய குழு ஒன்றும் சம்பவ இடத்திற்கு விரைந்துள்ளது.

## முதல் அணுகுண்டு சோதனையின் 60 ஆம் ஆண்டு நினைவு தினம் அனுஷ்டிப்பு

(வோஷிங்டன்)

அமெரிக்காவில் 60 ஆண்டுகளுக்கு முன்பு 1945- ஆம் ஆண்டு யூலை 16 ஆம் திகதி முதன்முதலாக அணுகுண்டு சோதனை நடத்தப்பட்டது. நியூமெக்சிகோவில் உள்ள டிரினிட்டிசைட் என்ற இடத்திலேயே இந்தச் சோதனை நடத்தப்பட்டது.

இந்த இடத்தில் நேற்று முன்தினம் நூற்றுக்கணக்கான மக்கள் கறுப்பு ஆடை அணிந்தபடி தங்கள் எதிர்ப்பை அமைதியாகத் தெரிவித்தனர்.

அணுகுண்டுக்கு ஜப்பானில் இரண்டு இலட்சம் பேர் வரை பலியானார்கள். இதனால் இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் மக்கள் கூடினர்.

ஒருவர் தன் ரி-ஷேர்ட்டில் "இங்குதான் ஆரம்பமானது இங்கேயே முடியட்டும்" என்ற வாசகத்தை எழுதியிருந்தார். இங்கு வந்திருந்த ஜப்பானியர் ஒருவர் மீண்டும் ஒரு ஹிரோஷிமா நாகசாகி ஏற்படாது என்று நம்புகிறேன் என்று கூறினார்.

## உலகம்முழுவதும் ஒரு மணி நேரத்தில் ஒரு கோடி புத்தகம் விற்பனை

(லண்டன்)

'ஹாரிபொட்டர்' புத்தகம் வாங்க உலகம் முழுவதும் போட்டாபோட்டி நிலவியது. ஒரு மணி நேரத்தில் ஒரு கோடி புத்தகங்கள் விற்றுத்தீர்ந்ததாக அறிவிக்கப்படுகிறது.

உலகம் முழுவதும் இளந்தலைமுறையினரின் அமோக ஆதரவைப் பெற்ற புத்தகம் 'ஹாரிபொட்டர்' இங்கிலாந்தை சேர்ந்த ஜே.கே.ரவுலிங் என்ற பெண் எழுத்தாளர் உருவாக்கிய கற்பனை கதாபத்திரம் தான்'ஹாரி பொட்டர்' பாடசாலை மாணவனான 'ஹாரி' மற்றும் அவனுடைய நண்பர்களின் வீரதீர சாகசங்களையும், மாயா ஜாலங்களையும் விவரிக்கும் இத்தகைய புத்தகங்கள் இதுவரை ஐந்து தொகுப்புகள் வெளிவந்து 27 கோடி பிரதிகள் விற்று சாதனை படைத்துள்ளன.

இளம் நெஞ்சங்களை எதிர்பார்ப்பில் ஏங்க வைத்திருந்த ஆறாவது தொகுப்பான 'ஹாரிபொட்டர் அன்ட் தி ஹாப்-பிளட் பிரின்ஸ்' புத்தகம் நேற்று முன்தினம் உலகம் முழுவதும் ஒரே நேரத்தில் வெளியிடப்பட்டது. இங்கிலாந்து தலைநகர் லண்டனில் நள்ளிரவு 12 மணி ஒரு நிமிடத்துக்கு இந்தப் புத்தகம் விற்பனைக்கு வந்தது. குழந்தைகள் தங்கள் பெற்றோருடன் வரிசையில் காத்திருந்து புத்தகங்களை வாங்கிச் சென்றனர்.

உலகம் முழுவதுமே, கடைகளில் இருந்து பறித்துச் செல்வது போல் முண்டியடித்துக் கொண்டு இந்தப் புத்தகத்தை வாங்கிச் சென்றனர். விற்பனைக்கு வந்த ஒரு மணி நேரத்தில் ஏறத்தாள ஒரு கோடி புத்தகங்கள் விற்று தீர்ந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

## லண்டன் நகர் குண்டுவெடிப்பு தீவிரவாதிக்கு இஸ்ரேல் டெல்அவிவ் தாக்குதலுடன் தொடர்பு

(ஜெருசலேம்)


இரண்டு ஆண்டுகளுக்கு முன் இஸ்ரேலில் நடைபெற்ற குண்டுவெடிப்புக்கும், லண்டன் தொடர் குண்டு வெடிப்பில் ஈடுபட்ட தீவிரவாதிக்கும் தொடர்பு இருக்கலாம் என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

இது தொடர்பாக இஸ்ரேலியப் பத்திரிகை வெளியிட்ட செய்தியில், இஸ்ரேலில் டெல்அவிவ் நகரில் 2003 ஏப்ரல் 30 ஆம் திகதி ஒரு தற்கொலைப் படைத்தாக்குதல் நிகழ்ந்தது. இந்தச் சம்பவத்தில் மூன்று இஸ்ரேலியர்கள் பலியாயினர். பிரிட்டனில் வசித்த பாகிஸ்தான் வம்சாவளியைச் சேர்ந்த ஆசிப் ஹனீப் மற்றும் ஓமர் ஷாரீப் ஆகிய இரண்டு தீவிரவாதிகளே குண்டுவெடிப்புக்குக் காரணம் எனத் தெரிவிக்கப்பட்டது.

ஆசிப் ஹனீப் இச்சம்பவத்தில் உடல் சிதறிப் பலியானார். மற்றொரு தீவிரவாதியான ஓமர் ஷாரீப்பின் உடலில் பொருத்தியிருந்த குண்டு அந்தச் சமயத்தில் வெடிக்கவில்லை. இதனால் அங்கிருந்து தப்பிச் சென்றார். சம்பவம் நடந்த ஒரு வாரத்திற்குப் பின் ஓமர் ஷாரீப்பின் உடலை பொலிசார் கடல் பகுதியில் கண்டெடுத்தனர்.

இந்நிலையில் லண்டன் ரயில் நிலையங்களில் நடந்த குண்டுவெடிப்பில் பலியான தீவிரவாதிகளில் ஒருவரான முகமது சித்திக்கான் கடந்த 2003 ஆம் ஆண்டு இஸ்ரேல் சென்றுள்ளார். அப்போது ஆசிப் ஹனீக்கும், ஓமர் ஷாரீப்பிற்கும் தற்கொலைப் படைத்தக்குதல் நடத்துவது பற்றி சொல்லிக் கொடுத்துள்ளார். இஸ்ரேல் பொலிசார் இது குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர். இவ்வாறு இஸ்ரேல் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

## டிஸ்கவரி விண்வெளிப் பயணம் காலவரையறையின்றி ஒத்திவைப்பு



டிஸ்கவரி விண்வெளி ஓடத்தை விண்ணில் செலுத்துவதை அமெரிக்காவின் நாசா விஞ்ஞானிகள் காலவரையறையின்றி ஒத்திவைத்தனர்.

டிஸ்கவரி எரிபொருள் டாங்கியில் அளவைக்காட்டும் கருவி குழறுபடியாகச் செயற்பட்டதால் அதை விண்ணில் செலுத்துவது புதன்கிழமை நிறுத்தப்பட்டது.

எனினும் வெள்ளிக்கிழமை வரை கோளாறுக்கு காரணமோ, சரிசெய்வதற்கான தீர்வோ கண்டுபிடிக்கப்படவில்லை.

எனவே மெதுவாக ஆய்வு செய்து சரி செய்வதில் நாசா விஞ்ஞானிகள் மும்முரம் காட்டி வருகின்றனர்.

கோளாறுக்கான காரணம் கண்டுபிடிக்கப்பட்டு சரிசெய்யப்பட்டு விட்டாலும் நான்கு நாட்களுக்குப் பிறகே ஓடம் விண்ணில் ஏவப்படும்.

2003 இல் ஏற்பட்ட கொலம்பியா விண்வெளி ஓட விபத்துக்குப் பின் இப்போது தான் டிஸ்கவரி ஓடத்தை விண்ணில் செலுத்த அமெரிக்காவின் விண்வெளி ஆய்வு அமைப்பான நாசா நடவடிக்கை எடுத்தது. ஆனால் அதிலும் பின்னடைவு ஏற்பட்டுள்ளது.

பல ஆண்டு பழமையானது டிஸ்கவரி ஓடம். எனவே அதன் பயணத்தில் சிக்கல் நேர்ந்து ஆபத்தில் முடியக் கூடாது என்பதால் அதன் பாதுகாப்பு அம்சங்களில் விஞ்ஞானிகள் மிகவும் அக்கறை காட்டிவருகின்றனர்.

கோளாறுக்கான காரணம் அதிஷ்டவசமாகத் தெரிய வந்தால் அடுத்த வாரம் அதை விண்ணில் ஏவ வாய்ப்புள்ளது என்று விண்வெளி ஓட திட்டத் துணைமேலாளர் வைனி ஹேல் தெரிவித்தார்.

# சோலையகத்தில் போராளிகள்-கலைஞர்கள் ஒன்றுகூடி உயர்மட்ட கலந்துரையாடல்

## -எதிர்காலத்திட்டங்கள் குறித்து ஆராய்வு

*(மட்டக்களப்பு)*

***கலை பண்பாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் பிரதேசக் கலைஞர்களையும் உயர்மட்டத் தளபதிகளையும், பொறுப்பாளர்களையும், போராளிகளையும் ஒன்று கூட்டிய உயர்மட்டக் கலந்துரையாடல் கடந்த சனிக்கிழமை கொக்கட்டிச்சோலைச் சோலையகத்தில் இடம்பெற்றது.***

மட்டக்களப்பு மாவட்டத்தின் வெல்லாவெளி, வவுணதீவு பட்டிப்பளை ஆகிய பிரதேச கலைஞர்களுடனான மேற்படி கலந்துரையாடல் காலை 10.00 மணியளவில் ஆரம்பமாகியது. நிகழ்வில் பொதுச் சுடரினை கோவில் போரதீவைச் சேர்ந்த கலைச்சுடர் க.தணி காசலம் ஏற்றி வைத்தார். தேசியக்கொடியினை மட்டக்களப்பு மாவட்ட இராணுவத் தளபதி நாகேஸ் ஏற்றிவைத்தார். அடுத்து மாவீரர்களை நினைவு கூர்ந்து அக வணக்கம் செலுத்தப் பட்டது. மாவட்ட கலை பண்பாட்டுத்துறைப் பொறுப்பாளர் அரிதாஸ் தலைமையுரையினை நிகழ்த்தினார். தமது உரையில்;-"இலைமறை காய்களாக இருக்கின்ற கலைஞர்களை இனம்கண்டு ஊக்கப்படுத்தி அவர்கள் ஊடாக விடுதலை சார்ந்ததாக மண்ணின் கலைகளை மகிமைப்படுத்தல் வேண்டும். இன்றைய அரசியல் நெருக்கடியான சூழ்நிலையில் கலைஞர்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். இவர்கள் இந்த இக்கட்டான சூழ் நிலைகளிலும் கூட தமது கலைப் பயணங்களைத் திறம்பட முன்கொண்டு செல்ல வேண்டும். கலைக் கூடாக தமிழரின் உயரிய விடுதலைப் போராட்ட வரலாறு முன் கொண்டு செல்லப்பட்டு மக்களுக்கு சிறப்பான முறையில் தெளிவூட்டப்படல் வேண்டும் என்றார். அதனைத் தொடர்ந்து மட்டக்களப்பு மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் இ.இளந்திரையன் தமது உரையில் ''எல்லோரும் பொதுக் கட்டமைப்பைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கும் இன்றைய கால கட்டத்தில் நாங்கள் பிரதேசக் கலைஞர்களை ஒன்று திரட்டி கலந்தா லோசித்துக் கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டி ருக்கிறோம். இன்றைய நாள் மறக்க முடியாத ஒரு பொன்னான நாளாகும். கலை உள்ளு ணர்வின் அடிப்படையிலே பிற க்கிறது. உலக நடப்புக்களை உள்வாங்கி, கலையானது வலிமை பெற்று உச்சநிலையை அடைகிறது. கலைகளின் தொட்டில் தமிழ் அன்னையின் மடிதான். கலைகளின் வகை யிலே நமது போர் வரலாறும் உன்னத கலை யாக உருப்பெற்று நிற்கிறது என்றார். இதனை யடுத்து மட்டக்களப்பு மாவட்ட தலைமைச் செயலகப் பொறுப்பாளரும் மூத்த உறுப் பினருமான சுரேஸ் தமது உரையில்;-மொழி நமது உயிர் கலை பண்பாடு நமது இதயம். இவற்றைக் கட்டிக் காக்க வேண்டிய கடப்பாடு கலைஞர்களிடமே இருக்கிறது. போரும் ஒரு அற்புதக்கலை, இது தமிழரின் தொழில், சமூக விழிப்புணர்வை, சமூக மேம்பாட்டை, உலகப் பார்வையை, உயரிய கொள்கைகளை கலை கள் முன்கொண்டு செல்ல வேண்டும். இதயம் சிதைந்தால் இறப்பு என்பது போல கலை பண்பாடுகள் சிதைந்தால் எல்லோருமே அழிந்து விட்டதாக ஆகிவிடும். அரேபிய மண் அரேபி யனுக்குத் தான். தமிழ் மண் தமிழனுக்குத் தான் கலை பண்பாட்டு சார் விழுமியங்களிலே தலைவர் கண்ணாக நிற்பவர். கலைஞர்கள் இல்லை என்றால் மக்கள் இல்லையென்றால் அனைத்துமே சிதைந்து விடும் எனவே தான் கலைஞர்கள் முக்கிய கர்த்தாக்களாக இருக் கிறார்கள் என்றார். மட்டக்களப்பு மாவட்ட இராணுவத்தளபதிநாகேஸூம் உரையாற்றினா. இதனையடுத்து கலைஞர்களிடமிருந்தும் கருத் துக்கள் பெறப்பட்டன. கலைச்சுடர் தணி காசலம், மகிழை மகேசன், ஆ.பிரபாகரன், கன் னன்குடா கலைவித்தகர், பாலகப்போடி, அம் பிளாந்துறைக் கலைஞரும், ஆசிரியருமான ஜீவரெத்தினம் போன்ற பலரும் கலந்து கொண் டனர். வெல்லாவெளிப் பிரதேசத்துக்கான கலைமட்டக்குழு உறுப்பினர்கள் தெரிவு, பிர தேச ரீதியாக கலைக்குழு செயற்பாட்டின் உத் தேசத் திட்டம் பற்றியும் ஆராயப்பட்டது.

## பளை காவல்துறையினரால் இரவு ரோந்து நடவடிக்கை

(வடமராட்சி கிழக்கு)

பளைப் பிதேசத்துக்கு உட்பட்ட பகுதி களில் பளை காவல் பணிமனைப் பொறுப் பாளரின் தலைமையில் இரவு நேரங்களில் வீதி ரோந்து நடவடிக்கை இடம்பெற்று வரு கிறது.

இந்நடவடிக்கையின் மூலம் இரவு நேரங் களில் வாகனங்களில் வெளிச்சம் இல்லாமல் வருபவர்கள், மதுபோதையில் வீதிகளில் சத்தமிட்டு திரிபவர்கள், சந்தேகத்துக்கு இட மாக நடமாடுபவர்கள் எனப் பலர் விசாரிக்கப் பட்டபின் எச்சரிக்கை செய்யப்பட்டு விடுவிக் கப்படுகின்றனர்.

காவல் பணிமனையின் இவ் இரவு நேர வீதி ரோந்தினால் இரவு நேரங்களில் வீதி களில் இருந்து சத்தமிட்டு வருபவர்களின் தொல்லைகள் குறைந்துள்ளது என இப் பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர். (11)

## திருமலை லிங்கநகர்ப் பகுதியில் இராணுவ வாகனம் மீது குண்டு வீச்சு

திருகோணமலை நகரின் நுழை வாயிலிலுள்ள லிங்கநகர் கண்டி வீதியி னூடாக சென்று கொண்டிருந்த இராணுவ வாகனம் ஒன்றின் மீது நேற்றுமுன்தினம் நண்பகல் கைக்குண்டொன்று வீசப் பட்டுள்ளது.

எனினும் இக்கைக்குண்டு வெடிக்க வில்லையெனவும் தொடர்ந்து இக்கைக்குண்டு செயலிழக்கப்பட்டதாகவும் தெரிக்கப் படுகின்றது.

# பெண் நாய்களை மலடாக்குவதன் மூலம் கட்டாக்காலிகளை கட்டுப்படுத்த முடியும்

*-கிளி. அத்தியாவசிய சேவைகள் குழுக்கூட்டத்தில் வலியுறுத்து*

(அலுவலக செய்தியாளர்)

பெண் இன நாய்களுக்கு மலட்டுத் தன்மையினை ஏற்படுத்து வதன் மூலமே கட்டாக்காலி நாய் களின் பெருக்கத்தினை ஓரளவு கட்டுப்படுத்த முடியும். இல்லாத விடத்து கட்டாக்காலி நாய்களை கட்டுப்படுத்துவதென்பது இயலாத தொன்றாகும்.

இவ்வாறு கடந்த செவ்வாயன்று கிளி.மாவட்ட அரச செயலகத்தில் இடம்பெற்ற அத்தியாவசிய சேவை கள் குழுக்கூட்டத்தில் வைத்திய கலாநிதி யூடிரமேஸ்குமார் கலந்து கொண்டு உரைநிகழ்த்துகையில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; இன்று கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரித்தவண்ணம் உள்ளதனை காணக்கூடியதாக வுள்ளது. நாய் கடித்த தாக்கத்தினால் சிகிச்சை பெறுபவர்களின் எண்ணிக் கை அதிகரித்து வருகின்றது.

இதனை ஒழிப்பதற்கு சம்பந்தப் பட்ட திணைக்களத்தினர் நடவடிக் கை மேற்கொண்டு வருகின்ற பொழு திலும் கட்டாக்காலி நாய்களின் பெருக்கம் அதிகரித்தவண்ணமே யுள்ளது.

எனவே கட்டாக்காலி நாய்களின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த வேண்டு மெனில் பெண் இன நாய்களுக்கு மலட்டுத் தன்மையினை ஏற்படுத்தும் நடவடிக்கையினை மேற்கொள் ளப்படும் போதிலேயே கட்டாக்காலி நாய்களின் பெருக்கத்தினை கட்டுப் படுத்த முடியும். அதற்கான நடவ டிக்கையினை சம்பந்தப்பட்ட திணைக் களங்கள் மேற்கொள்ள வேண்டு மெனவும் கேட்டுக்கொண்டார்.

(சோ)

## நால்வர் காயம்!

வட்டக்கச்சி இராமநாதபுரம் பகுதி யில் குளவி கொட்டியதில் நால்வர் காயமடைந்துள்ளனர் இச்சம்பவம் கடந்த சனிக்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் இடம்பெற்றது.

இராமநாதபுரம் மகாவித்தி யாலயத்திற்கு முன்பாக மரத்தில் இருந்த குளவிக் கூட்டுக்கு பாட சாலைச் சிறார்களால் கல் எறியப் பட்டது. இதனால் குளவிக்கூடு கலைந்தது சோதிராசா (வயது-58), பூலோகராசா (வயது-52) , நிரோஜன் (வயது-23), யோகன் (வயது-36) ஆகியோர் குளவிகளால் கொட்டப் பட்டு காயமுற்றனர். (12)

# சமூக பொருளாதார அபிவிருத்தி வங்கியால் ஏழு உழவு இயந்திரங்கள் வழங்கல்

(அலுவல செய்தியாளர்)

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் துரித புனர்வாழ்வு அபிவிருத்தி வேலைத் திட்டத்தின் கீழ் சமூக பொரு ளாதார அபிவிருத்தி வங்கியினால் உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு உழவு இயந்திரங்கள் வழங்கும் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை கிளி




நொச்சியில் இடம்பெற்றுள்ளது.

காலை 10.15 மணியளவில் சமூக பொருளாதார அபிவிருத்தி வங்கி மேலாளர் சிறீஸ்கந்தராசா தலை மையில் வங்கி முன்றலில் அமைக்கப்பட்ட விசேட மண்டபத்தில் மங்கல விளக்கேற்றலுடன் நிகழ்வு ஆரம் பமாகியது.


நிகழ்வின் தலைவர் தமது தலைமையுரையில் சமூக பொருளாதார அபிவிருத்தி வங்கியானது தனது ஆரம்ப காலமாகிய 1997ஆம் ஆண்டிலிருந்து பல சமூக நலத் திட்டங்களையும், துரித புனர்வாழ்வு அபிவிருத்தி வேலைத் திட்டச் செயற்பாடுகளையும் ஊக்குவிக்கும் நோக்கில் கடனடிப்படையில் நிதிகளை வழங்கிவருகின்றது. அந்த வகையில் 2004ஆம் ஆண்டு ஒன்பதாம் மாதத்தில் ஏழுஉழவு இயந்திரங்களை வழங்கியது என்றும் இருபத் தோராயிரம் வாடிக்கையாளர்களைக் கொண்டு இயங்கிவரும் இவ் வங்கியானது இன்று மீண்டும் உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனங்கள் மக்கள் மத்தியில் முன்னெடுக்கப்பட வேண்டிய வேலைத்திட்டச்செயற்பாடுகளை துரிதமாக முன் னெடுப்பதற்கும் விருத்தி செய்வதற்குமாக ஏழு உழவு இயந்திரங்கள் வங்கியினால் வழங்கப்பட்டுள்ளதாகவும், தெரிவித்தார்.

இந்நிகழ்வில் சமூக பொருளாதார அபிவிருத்தி வங்கிப் பொறுப்பாளரும், உதவி ஆணையாளருமாகிய கந்தசாமி, தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் சமூக ஆற்றுப்படுத்தல் பிரிவின் பணிப்பாளர் செல்வராசா, நாகேந்திரம் கரைச்சி விசேட ஆணையாளர்.பொன்.நித்தியானந்தம், மக்கள் வங்கி முகாமையாளர் பால்ராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கிளிநொச்சி அகதிகள் புனர்வாழ்வுக்கழகம், கிளி மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகம், வன்னி நிர்மாணிகள் தொழில் நுட்ப நிறுவனம், முல்லைத்தீவு அகதிகள் புனர் வாழ்வு நிறுவனம், வடமராட்சிகிழக்கு சுனாமி வேலைத் திட்டப்பகுதி, போரினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கான கல்வி சார் நிறுவனம் முல்லைத்தீவு தமிழர் புனர்வாழ்வுக் கழகம் என்ப வற்றிற்கு இவ் உழவு இயந்திரங்கள் வழங் கப்பட்டன.

(கு)

# கால்நடை வைத்தியஅலுவலகம் திறப்பு



நிகொட் திட்ட நிதியுதவியுடன் கட்டப்பட்ட கிளி நொச்சி மாவட்ட கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்தின் அலுவலகம் 155 ஆம் கட்டை யில் கடந்தசனிக்கிழமை திறந்துவைக்கப்பட்டது. காலை 10.00 மணியளவில் கிளிநொச்சி கால்நடை வைத்திய அலுவலகத்தின் கால்நடை போதனாசிரியர் பத்மநாதன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், பொதுச் சுடரினை வன்னி வேளாண் சேவைநிறுவனப் பணிப்பாளர் குலம் ஏற்றிவைக்க, தேசியக்கொடியினை தமிழீழ பொரு ண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் கரிகாலன் ஏற்றினார்.

அலுவலக பெயர்ப்பலகையினை மேற்கு கால்நடை உதவிப்பணிப்பாளர் சிவநாதன் திறந்துவைத்தார். நிகொட் திட்ட பெயர்ப் பலகையினை கிளிநொச்சி மாவட்ட கட்ட டத்திணைக்களத்தைச் சேர்ந்தபிரதம பொறியியலாளர் சுந்தரகுமார் திரைநீக்கம் செய்துவைத்தார். கட்டடநாடா வினை வடக்கு கிழக்கு மாகாண கால்நடை உற்பத்தி சுகாதார திணைக் களப் பணிப்பாளர் சிவலிங்கம் வெட்டித் திறந்துவைத்தார்.கிளிநொச்சி மாவட்ட கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்கள அலுவலகத்தின் வைத்தியா திருமதி ரேணுகா கௌரி திலகனின் தலைமையுரையினைத் தொடர்ந்து கருத்துரைகள் இடம்பெற்றது.இதில் கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்கள வைத்தியர்கள் போதனாசிரியர்கள், அரச, அரச சார்பற்ற, துறைசார்ந்த பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். (05)

# ஊரகவளர்ச்சிப் பணிக் குழுவால் மாவீரர் அறிவகம் திறப்பு

பெரியமடு, ஈச்சலவத்தை ஊரக வளர்ச்சிப் பணிக் குழுவினரால் பெரிய மடுவில் மாவீரர் அறிவகம் ஒன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது. மேற்படி அறிவகம் திறக்கப்பட்ட கட்டடம், ஏற்கனவே இருந்த போதிலும், அவை முழுமையாக்கப்படாமையினால் மேற்படி ஊரக வளர்ச்சிப் பணிக் குழுவினரால் இக் கட்டடம் மீள் புனரமைப்புச் செய்யப்பட்டு மக்கள் பயன்படுத்தப்படும் விதமாக மாவீரர் அறிவகமாகத் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இதேவேளை பெரிய மடு நன்னீர் மீனவ சங்க மீனவர்களுக்காக தமிழீழ ஊரக வளர்ச்சிப் பணியினால் மானியமாக வலைகளும் வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி நிகழ்வுகளில் அறிவகத் திறப்பு விழா நிகழ்வு கடந்த சனிக் கிழமை காலை 10.00 மணிக்கு மன்னார் மாவட்டஊரக வளர்ச்சிப் பணிப் பொறுப்பாளர் தென்றல் மாறன் தலைமையில் நடைபெற்றது. ஆரம்ப நிகழ் வாக பொதுச் சுடரினை லெப்டினன் கேணல் இராசசிங்கத்தின் தந்தையார் ஏற்றி வைக்க தமிழீழ தேசியக் கொடியினை தமிழீழ ஊரக வளர்ச்சிப் பொறுப்பாளர் கந்தம்மான் ஏற்றி வைத்தார். தொடர்ந்து மங்கல விளக்கு ஏற்றப்பட்டு மாவீரர் அறிவகப் பெயர்ப் பலகையினை மாந்தை மேற்குப் பிரதேச சபையைச் சேர்ந்த நிக்ஷன் திரை நீக்கம் செய்து வைத்தார். மாவீரர் அறிவகத்தினை கந்தம்மான் நாடாவைத் வெட்டித்திறந்து வைத்தார்.

அறிவகத்துக்குள் அமைக்கப்பட்டிருந்த பெரிய மடு ஈச்சலவத்தை மாவீரர் களின் பெயர் பட்டியல்களை மடு அடம்பன் அரசியல் துறைப் பொறுப்பாளர் றொபேட் திரை நீக்கம் செய்து வைத்து அக வணக்கம் இடம்பெற்று தொட ர்ந்து பெரிய மடு பாடசாலை மண்டபத்தில் வலைகள் வழங்கும் நிகழ்வும் கருத்துரைகளும் இடம்பெற்றது.

# காரைநகர் கடற்படையினர் சண்டைப் பயிற்சி
# கடற்றொழிலாளர் தொழிலுக்குச் செல்ல அச்சம்

(யாழ்ப்பாணம்)

**யாழ். காரைநகர் கடற்பரப்பில் சிறிலங்கா கடற்படையினர் இரவு வேளைகளில் தீவிர சண்டைப் பயிற்சிகளில் ஈடுபட்டு வருவதால் கடற்றொழிலாளர் தொழிலுக்குச் செல்ல அஞ்சுகின்றனர்.**

அண்மைக்காலமாக இரவு வேளைகளில் சிறிலங்கா கடற்படையினர் மேற் கொண்டு வரும் சண்டைப் பயிற்சிகளால் ஏற்படும் வெடி ஓசைகள், குண்டுச் சத்தங்கள் என்பன அப்பகுதி மக்களை பெரும் அச்சத்தில் ஆழ்தியுள்ளது.

அத்துடன் இப்பகுதி கடற்றொழிலாளர்களும் தம் தொழில் நடவடிக்கைகளுக்காக இரவு நேரத்தில் கடற்றொழிலுக்குச் செல்ல அச்சம் தெரிவிக்கின்றனர்..

இது இவ்வாறிருக்க காரைநகர் கடற்கரையோரங்களில் இருக்கும் காவலரண்களைப் புனரமைக்கும் நடவடிக்கைகளிலும் கடற்படையினர் தீவிரம் காட்டி வருகின்றனர். (33)

# யாழ். குடாநாட்டில் குற்றச் செயல்கள் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் என்றும் இல்லாதவாறு குற்றச்செயல்கள் பெருகி வருவதாகப் பொலிஸ் நிலையங்களில் பதிவு செய்யப்பட்டுள்ள முறைப்பாடுகளிலிருந்து தெரிய வருகிறது

குடும்பப் பிரச்சினைகள், அடிதடி மோதல்கள், கடத்தல், கொள்ளை, காணிப்பிரச்சினைகள், கசிப்பு என நாள்தோறும் நூற்றுக்கு மேற்பட்ட பிரச்சினைகள் குடாநாட்டு பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகள் செய்யப்பட்டாலும் சில பிரச்சினைகளுக்கு மட்டுமே தீர்வு காணப்படுவதாகவும் பல குற்றச் செயல்களில் தொடர்புடைய நபர்கள் குற்றவாளிகள் இனங்காணப்படாமையானது தொடர்ச்சியான குற்றச் செயல்கள் அதிகரித்து வருவதற்குக் காரணமாக அமைந்து உள்ளது. மேலும், பொலிசாரின் செயற்பாடு களும் குற்றவாளிகளுக்கும் குற்றச் செயல்களுக்கும் துணை போவதாகவே அமைந்து இருப்பதாகத் தெரிய வருகின்றது. (28)

# அனுமதிப்பத்திரமின்றி கொண்டுசென்ற 1220 போத்தல் சாராயம் பிடிபட்டது

(யாழ்ப்பாணம்)

அனுமதிப்பத்திரமின்றி உழவு இயந்திரம் ஒன்றில் ஏற்றிச்செல்லப்பட்ட 1220 போத்தல் சாராயம் பொலிசாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை இவ்வாறு அனுமதிப்பத்திரமின்றி ஏற்றிச் செல்லப்பட்ட சாராயத்தை கைப்பற்றிய யாழ். பொலிசார். சாராயம் ஏற்றிச் செல்லப்பயன்படுத்தப்பட்ட உழவு இயந்திரத்தையும் அதனை ஓட்டிச்சென்ற சாரதியையும் கைது செய்துள்ளனர்.

யாழ். நகரப்பகுதியில் இருந்து சட்டவிரோதமான முறையில் மேற்படி 1220 போத்தல் சாராயத்தையும் சுன்னாகம் நோக்கி சிலர் கடத்திச்சென்ற போதே தாம் அவற்றை கொக்குவில் பகுதியில் வைத்து கைப்பற்றியதாகப் பொலிசார் கூறினர். (33)

# கண் சிகிச்சை நிபுணர் பற்றாக்குறை
# யாழ். போதனா வைத்தியசாலையில் நெருக்கடி

## சுகாதாரத் திணைக்களம் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் கடமையாற்றுவதற்கு போதியளவு கண் வைத்திய நிபுணர்கள் இல்லாமையை பெரும் பாதிப்பை ஏற்படுத்தியிருப்பதாக யாழ். மாவட்ட சுகாதார திணைக்களம் கூறுகிறது.

யாழ். மாவட்டத்தை பொறுத்த வரையில் சுமார் இரண்டு இலட்சத்துக்கும் அதிகமான கண் சம்பந்தப்பட்ட நோயாளர்கள் உள்ளனர்.

எனினும் இவ்வாறான கண் சம்பந்தப்பட்ட நோயாளர்களுக்கு சிகிச்சையளிப்பதற்காக ஒரு சில கண் வைத்திய நிபுணர்கள் மாத்திரமே யாழ். மாவட்டத்தில் கடமையாற்றி வருகின்றனர்.

இந் நிலைமை காரணமாக யாழ். மாவட்டத்தில் இருக்கின்ற கண் சம்பந்தப்பட்ட நோயாளர்களுக்கு திருப்திகரமான நிபுணத்துவ சேவைகளை வழங்குவதில் பல நெருக்கடிகள் தோன்றிருப்பதாக சுகாதாரத் திணைக்களம் மேலும் அறிவித்துள்ளது. இதனால் பெருந்தொகையான நோயாளர்கள் பாதிக்கப்படுவதாகவும் சுட்டிக்காட்டப்படுகின்றது. (33)

# கடற்றொழிலாளருக்கு எப்.ஐ.ஓ நிறுவனம் 100 வெளி இணைப்பு இயந்திரங்கள் வழங்கியது

(யாழ்ப்பாணம்)

சுனாமியால் பாதிக்கப்பட்ட யாழ். வடமராட்சி கடற்றொழிலாளர்களுக்கு 100 வெளிஇணைப்பு இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இவற்றை எப்.ஐ.ஒ. என்ற சர்வதேச அமைப்பு வழங்கியிருப்பதாக கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்கள உதவிப் பணிப்பாளர் ரி.தர்மரட்ணம் கூறினார்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளர்களின் தொழில் துறை மேம்பாட்டினை கவனத்தில் கொண்டே இந்த 100 வெளி இணைப்பு இயந்திரங்களும் வழங்கப் பட்டுள்ளதாகக் கூறினார். இதன் மூலம் 100 கடற்றொழிலாளர் குடும்பங்கள் பயனடைந்துள்ளன.(33)

# முன்னரங்க நிலைகளைப்படம் பிடித்ததாக இராணுவம் கண்காணிப்புக் குழுவிடம் முறையீடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நாகர்கோயில் பிரதேசத்தில் இராணுவ முன்னரங்க காவல் அரண்களை தமிழீழ விடுதலைப்புலிகள் படம் பிடித்ததாக இராணுவம் குற்றம் சுமத்தியுள்ளது.

கடந்த சனிக்கிழமை நண்பகல் இச்சம்பவம் இடம்பெற்றதாக போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிற்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இச்சம்பவத்தில் சீருடை தரித்த சுமார் 30 புலிகள் இருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (32)

# யாழ்.போதனா வைத்தியசாலையில் விபத்துச் சேவை பிரிவை ஆரம்பிக்கக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையின் விபத்துச்சேவை பிரிவிற்கென தனியான ஒரு பிரிவு நவீன வசதிகளுடன் அமைக்கப்படுவது அவசியம் என இவ்வைத்தியசாலையின் நிர்வாக அதிகாரிகள் வலியுறுத்தியுள்ளனர்.

யாழ்.குடாநாட்டில் தற்போது விபத்துக்களும், அனர்த்தங்களும் அதிகரித்துள்ளன. இவற்றில் பாதிக்கப்பட்டு காயங்களுக்கும்,தாக்கங்களுக்கும் உள்ளாவோருக்கு உடனடியாகவே தீவிர சிகிச்சைகள் வழங்கப்படவேண்டிய தேவைப்பாடுள்ளது.

எனினும் இத்தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்யும் விதத்திலான விபத்துச்சேவைப்பிரிவு ஒன்று யாழ். போதனா வைத்தியசாலையில் இல்லாதிருக்கின்றமை பாரிய விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது. [illegible] வேளைகளில் வீண் உயிரிழப்புகளுக்குப் இது காரணமாகி [illegible]

எனவே இந்நிலைமையை கவனத்தில் கொண்டு யாழ்.போதனா வைத்தியசாலை பிரதான வாயிலுக்குச் சமீபமாக புதிய கட்டடம் ஒன்று அமைக்கப்பட்டு, அதில் நவீன வசதிகளுடன் கூடிய விபத்துச்சேவைப்பிரிவு ஒன்று இயங்கச்செய்தல் அவசியம் எனவும் மேலும் வலியுறுத்தப்பட்டுள்ளது. (33)

# உள்ளூராட்சி சபைகளுக்கு நிரந்தரக்கட்டடம் உ.உ. ஆணையாளர் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணக் குடாநாட்டில்சொந்தக் கட்டடங்கள் இன்றி தற்காலிக கட்டடங்களில் இயங்கி வருகின்ற உள்ளூராட்சி சபைகளுக்கென நிரந்தரக் கட்டடங்களை அமைத்துக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக உள்ளூராட்சி உதவி ஆணையாளர் வி.இராசையா தெரிவித்துள்ளார்.

யாழ். குடாநாட்டில் இருக்கின்ற பத்திற்கும் அதிகமான பிரதேச சபைகள் மற்றும் நகர சபைகள் சொந்தக் கட்டடம் இன்றி தற்காலிகக் கட்டடங்களிலேயே இயங்கி வருகின்றன.

இவ்வாறான தற்காலிக கட்டடங்களில் அதிகமானவை தனியாரது வீடுகளாகவே இருக்கின்றமையால் இவற்றில் ஒரு பிரதேச சபை அல்லது நகர சபைக் கட்டடத்திற்குரிய அடிப்படை வசதிகள், இடவசதிகள் என்பன இல்லாதுள்ளன. இதனால் இவ்வாறான உள்ளூராடசி சபைகளின் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டமையைக் கவனத்தில் கொண்டே இதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், இவ்வாறு புதிய கட்டடங்களை நிறுவுவதற்கு பொருத்தமான காணித் தெரிவுகள் இடம் பெற்று வருவதாகவும் இராசையா மேலும் கூறினார். (33)

# சுகாதார நிலைமையைச் சீர் செய்ய உணவக உரிமையாளருக்கு ஒருவாரம் அவகாசம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்திலுள்ள உணவகங்களின் சுகாதார நிலைமையைச் சீர்செய்து கொள்வதற்காக உணவகங்களின் உரிமையாளர்களுக்கு ஒருவார கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

இந்தக்கால அவகாசம் பற்றிய அறிவிப்பினை பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி அ.கேதீஸ்வரன் வழங்கியுள்ளார்.

யாழ்.மாவட்டத்தில் இயங்குகின்ற உணவகங்களில் 75 வீதமானவற்றின் சுகாதார நிலைமைகள் மிகமோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன. இதன் காரணமாக யாழ்.மாவட்டத்தில் வயிற்றோட்டம், வாந்திபேதி போன்ற கொடிய நோய்களின் பாதிப்புக்களுக்குள்ளாகுவோர் தொகையும் அதிகரித்துள்ளது.

எனவே இதனைக் கருத்தில் கொண்டு யாழ். மாவட்டத்திலுள்ள உணவகங்களின் உரிமையாளர்கள் தம் உணவகங்களில் நிலவும் சுகாதார குறைபாடுகளை சீர்செய்ய ஒருவாரகால அவகாசம் வழங்கப்படுமென அறிவித்துள்ள வைத்திய கலாநிதி அ.கேதீஸ்வரன். தவறின் உணவகங்கள் மூடப்படும் என்றும் எச்சரித்துள்ளார். (33)

# சிறைச்சாலை குறைபாடுகளை நீக்க யாழ்.ம.உ. ஆணைக்குழு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்- சிறைச்சாலையில் நிலவுகின்ற குறைபாடுகளைப் போக்குவதற்கு உடனடி நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு வலியுறுத்தியுள்ளது.

இதுதொடர்பாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு இலங்கை சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகத்திற்கு கடிதம் ஒன்றையும் அனுப்பியிருப்பதாகத் தெரிய வருகிறது.

யாழ். சிறைச்சாலையானது ஒரு சிறைச்சாலைக்குரிய எந்தவொரு அடிப்படை வசதிகளும் இல்லாத நிலையில் இயங்கி வருகிறது. குறிப்பாக உணவு, சுகாதார வசதிகளும் சிறை கூண்டுகளின் இடவசதியும் மிக மோசமான நிலையிலுள்ளன.

இதனால் கைதிகளின் உரிமைகள் மீறப்படுவதாகச் சுட்டிக்காட்டி மேற்படி விடயத்தை வலியுறுத்தியுள்ள இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு,

யாழ்- சிறைச்சாலையில் நிலவும் குறைபாடுகளைப்போக்கி கைதிகளின் அடிப்படை உரிமைகளுக்கு மதிப்பளிக்க வேண்டும் என்பதையும் வலியுறுத்தியுள்ளது. (33)

# வீதியில் திரியும் கால்நடைகளை கட்டுப்படுத்தக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் நகர்ப்புறங்களிலும் மற்றைய பிரதேசங்களிலும், வீதிகளில் திரியும் கால்நடைகளை கட்டுப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமென பொதுமக்களிடம் இருந்து ஏராளமான முறைப்பாடுகள் சம்பந்தப்பட்டவர்களுக்கு கிடைத்திருப்பதாகத் தெரிய வருகிறது.

வீதிகளில் திரியும் கால்நடைகளால் வீதி விபத்துக்கள் அதிகரித்து இருப்பதுடன். வீதிகளும் அசிங்கம் அடைவதாகவும் வீதிகளில் திரியும் கால் நடைகளைப் பிடித்து உரிய நடவடிக்கையினை சம்பந்தப்பட்டோர் எடுக்க வேண்டும் என்றும் சமீபகாலமாக இது தொடர்பான நடவடிக்கைகள் எதனையும் எடுக்கவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது. (28)

தமிழகத்தில் மீண்டும் காவிரி நீர்ப் பிரச்சினை மையம் கொண்டு விட்டது. காவிரி நீரை கர்நாடக அரசு திறந்து விட வேண்டுமென்று போராட்டங்கள் வலுப் பெறத் தொடங்கியுள்ளன. ஆனால் தமிழக அரசோ காவிரி நீர்ப்பிரச்சினையினை அயல் நாட்டு பிரச்சினை போல் தான் அணுக முற்பட்டுள்ளது. கர்நாடக அரசு காவிரி நீரை திறக்கக் கோரி போராட்டம் நடத்திய கம்யூனிஸ்ட் கட்சியினரை தமிழக பொலிசார் இரும்புக் கரம் கொண்டு ஒடுக்குவதில் தான் மும்முரமாக இருக்கின்றனர் போலத்தான் நிலைமை கள் உள்ளன.

கடந்த வெள்ளிக்கிழமை தமிழக கம்யூனிஸ்ட் கட்சியினர் கர்நாடக அரசு காவிரியைத் திறந்துவிட வேண்டுமென்று

காவிரி நடுவர் மன்றத் தீர்ப்பின் பிரகாரம் 205.டி.எம்.சி தண்ணீரை கர்நாடகம் காவிரியிலிருந்து திறந்து விட வேண்டும். ஆனால், கர்நாடாக அரசு இதற்கு ஏற்ப என்றுமே நடந்துகொள்ளவில்லை.

கர்நாடக காவிரி நீரேந்துப் பகுதிகளில் அதிக மழை பெய்து கர்நாடக நீரணைகள் நிரம்பின் நீர் திறந்துவிடப்படும். ஏனெனில், தொடர்ச்சியாக நீர் மட்டம் கூடுமானால் காவிரிப் பகுதியில் வெள்ளப்பெருக்கு அவலம் உருவாகிவிடும் என்பதனாலேயே கர்நாடக அரசு தன்னை கொடையாளியாக காட்டிக் கொள்ள தண்ணீரை படு அக்கறையாகத் திறந்து விடுவதுண்டு.

கடந்த வாரத்திலும் இவ்வாறு நடைபெற்றது. இதனால் தமிழக டெல்டா விவசாயிகள் சந்தோஷத்தில் மிதந்தனர். ஆனால் காவிரிப்



விசாரணையே ஆகும். கர்நாடகாவுடன் மோதலையோ கசப்பையோ இப்போது ஏற்படுத்துவது தனது வழக்கு விசாரணையில் அது தாக்கத்தை செலுத்திவிடும் என்று தமிழக முதலமைச்சர் உறுதிபட நம்புகின்றார்.

அதன் நிமித்தம் கர்நாடகஅரசுடன் இணங்கிப்போக முற்படுகின்றார் என்றே நம்பகமான தகவல்கள் வெளியாகியுள்ளன.

அது மட்டுமன்றி இன்னும் ஒன்று இரண்டு மாதங்களில் தமிழக சட்ட சபைத் தேர்தலை நடத்தி விடுவதிலும் மிகுந்த அக்கறை கொண்டுள்ள தமிழக முதலமைச்சர் அதற்கான புதிய புதிய திட்டங்கள் வகுப்பதில் தனது மண்டையினை பிய்த்துக் கொள்வதா கவும் தெரிய வந்திருக்கின்றது.

தேர்தல் நடத்தப்படுமானால் மக்கள் தன்னை ஓரம் கட்டி விடக்கூடாது (?) என்பதற்காகவே பல புதிய சலுகைகளை மழையாக அள்ளிக் கொட்டிக் கொண்டிருக்கின்றார். இந்த நேரத்தில் கர்நாடக அரசுடன் நீ பிடி நான் பிடி என்று போர்க்கொடி தூக்குவது எதற்கும் பயன்படாது என்பது தமிழக முதலமைச்சரின் திடமான நம்பிக்கை.

ஏற்கனவே தமிழக எதிர்க்கட்சிகள் கம்யூனிஸ்ட் கட்சியின் போராட்டத்தை தமிழக அரசு ஒடுக்க முற்பட்டுள்ளதாக கண்டிக்கத் தவறவில்லை. தமிழக டெல்டா விவசாயிகள் மீது அரசிற்கு அக்கறையில்லை என்று பறை தட்டிக் கொண்டு நிற்கின்றன.

அது மட்டுமன்றி தி.மு.க தலைவர் கருணாநிதி, தமது கூட்டணி கூட்டத்தில் தமிழகத்திற்கு கர்நாடக நடுவர் மன்றத் தீர்ப்பு படி தண்ணீர் திறந்து விட வேண்டுமென்று தீர்மானம் கொண்டு வந்துள்ளார். கர்நாடக நடுவர்

காட்டத் தொடங்கி விட்டது என்பதும் தெளிவான விடயம்.

தி.மு.க தலைவர்கருணாநிதி தமிழக தேயிலை உற்பத்தியாளர்களுக்கு மானியம் வழங்க வேண்டுமென்று குரல் கொடுத்தார். மத்திய அரசிடம் வேண்டுகோள் விடுத்தார். உடனே மானியத்தை வழங்கி விட்டார் மன்மோகன்சிங்.

அத்துடன் குற்றவியல் நடைமுறைச் சட்டச் திருத்தம் தேவையில்லை என்று தமிழக சட்டத் தரணிகள் ஒன்று திரண்டு மத்தியரசுக்கு எதிராக கிளர்ந்தனர்.ஒரு வார காலம் நீதி மன்றங்களே ஸ்தம்பித்தன.


உடனே ஆபத்வாந்தவனாக தி.மு.க. தலைவர், பிரதமர் காங்கிரஸ் கட்சித்தலைவி சட்டதுறை அமைச்சர், போன்றோருக்கு குற்றவியல் சட்ட திருத்தத்தை கைவிடுமாறும் கடந்த ஒரு வாரகாலமாக நீதிமன்றங்கள் முடங்கி போனதால் மக்கள் துன்பப்படுவதாகவும் கடிதம் எழுதினார்..

என்ன ஆச்சரியம்.... உடனடியாக பிரதமர் சட்டத் தரணிகளின் குழுவை சந்தித்தார். குற்றவியல் நடைமுறை சட்ட திருத்தம் அமுலுக்கு வராது என்று உறுதியளித்துள்ளார். இதனால் சட்டத்தரணிகள் மத்தியில் தி.மு.க. தலைவர் பெயர் எடுத்துவிட்டார்.

ஆக....நாளுக்கு நாள் தி.மு.க. கூட்டணி மக்கள் மத்தியில் பிரபல்யம் பெற்று வருகின்றது..... என்பதும் அதற்கு மத்திய அரசே பின்னால் இருப்பதாகவும் கூட நம்ப முடியும்.

எனவே தமிழக அரசு விரைந்து சட்டசபைத் தேர்தலை நடாத்துவது உறுதி

# சுயநலம் மிகுந்து போன காவிரி நீர் விவகாரம்!



மன்மோகன்சிங்

போராட்டத்தில் குதித்திருந்தனர். ஆனால் தமிழக பொலிசார் போராட்டம் நடத்தியவர்கள் மீது தடியடி நடத்தியிருப்பது பொருத்தப்பாடுடை



ஜெயலலிதா

யதா? எனறு கேள்விக் கணைகள் கிளப்பி இருக்கின்றன.

ஒவ்வொரு ஆண்டும் இம்மாத காலப் பகுதியில் காவிரி நீர்ப்பிரச்சினை முளை விடுவது வழமையே. அதனையடுத்து



தமிழகத்திலிருந்து கர்நாடகத்திற்கு எதிரான உணர்வலைகள் எழுவதும், கர்நாடகா போக்கு சாக்காத, தண்ணீரை திறந்து விடுவதும் தொடர் கதையே.

பகுதியில் மழை நின்றவுடன் கர்நாடகாவும் காவிரியை பூட்டிவிட்டது.

ஆக--தனது மாநிலத்தில் வெள்ளப் பெருக்கு அபாயத்தைத் தடுக்கவே தமிழகத்திற்கு தண்ணீரை திறந்து விட்டதாக நம்பத் தோன்றுகின்றது.

இதேவேளை காவிரி பாசனப்பகுதியில் இதுவரை கடந்த மூன்றாண்டுகளாக (குறுவை, தாளடி) செய்கை நடைபெறவில்லை. இந்த ஆண்டும் நான்காவது முறையாக செய்கை பண்ண முடியாது போலுள்ளதே...? சம்பா பயிரிடுவதும் இயலாது போலுள்ளதே... இம் முறையும் தோல்வியா.. என்று தமிழக முதலமைச்சர் கவலை வெளியிட்டிருக்கின்றார். தமிழக முதலமைச்சரின் கவலை இப்போது விமர்சனத்திற்குள்ளாகியுள்ளது எனலாம்.

எவ்வாறெனில்... இதுவரை காலமும் காவிரி டெல்டா விவசாயிகளுக்காக முதற் குரல் கொடுப்பவரே தமிழக முதலமைசாகத் தான் இருந்து வந்திருக்கின்றார். அத்துடன் ஆண்டாண்டு காலமாக காவிரி நீர் பிரச்சினையால் கர்நாடக அரசுடன் மல்லுக்கு நிற்பதுடன் பல் வேறு சர்ச்சைகளையும் ஏற்படுத்தி இருக்கிறார்.

ஆனால் இம் முறையோ காவிரி டெல்டா விவசாயிகளுக்காக மௌனமாகவே தான் இருக்கிறார். தனது கவலையினை வெளியிட்ட தோடு சரி இதனால் தான் இவரது கவலை பெரும் விசனத்தை ஏற்படுத்திவிட்டது எனலாம்.

இதற்குக் காரணம் ... கர்நாடக மாநிலத்தில் ஆரம்பமாகியுள்ள சொத்துக் குவிப்பு வழக்கு

மன்றத் தீர்ப்பின் படி நடந்து கொள்ள தவறுமானால் போராட்டங்கள் ஆர்ப்பாட்டங்கள் ஏற்படும் என்றும் கூறியிருக்கின்றார்.

அது மட்டுன்றி காவிரி பிரச்சினையில் தமிழக அரசு மெத்தனப் போக்கில் இருப்பதாகவும், கம்யூனிஸ்ட்டுக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

ஏற்கனவே நடுவர் மன்ற இறுதித் தீர்ப்பு வழங்கப்படாது 2006 ஆகஸ்ட் மாதத்திற்கு பிற்போடப்பட்டமை தமிழக முதலமைச்சரின் அக்கறையின்மையே என்பதும் மற்றொரு குற்றச்சாட்டு.

இதேவேளை கர்நாடக அரசு தமக்கே காவிரி நீர் போதாது போதாது, என்று ஒப்பாரி பாடுவது வழமையே ஆனால் இம் முறை உலக வங்கியின் கடனுதவியுடன் மேலும் ஆறு இலட்சம் ஏக்கரில் பாசன முறையை விரிவுபடுத்தவுள்ளதும் அம் பலமாகியுள்ளது. அப்படி யெனில் இதுவரை கர்நாடகா காவிரி தண்ணீர் தமக்கே பாசன முறைக்கு போதாது என்று கூறிய தெல்லாம் வெறும் நீலிக் கண்ணீரே என்று தமிழக எதிர்க்கட்சிகள் வெகுண்டுள்ளன.

எனவே தமிழக எதிர்க்கட்சிகள் காவிரியை கர்நாடகா திறக்க வேண்டும் என்பதில் விடாப்பிடியாக நிற்றற்கும் அதற்கு எதிர்கால சட்ட சபை தேர்தலும் காரணமாகும்.

ஏற்கனவே தமிழக அரசு சட்ட சபைத் தேர்தலை வெகு விரைவில் நடத்தவுள்ள தாக தகவல் கசிந்தவுடனேயே திமுக தலைவர்தேர் தலை நோக்கி காய்களை நகர்த்த ஆரம்பித்து விட்டார் என்பதும் வெளிப்படை.

அந்த வகையில் மத்திய அரசு தமிழக எதிர்க்கட்சிகளுக்கு சார்பாக பச்சைக் கொடி

யாகும் பட்சத்தில் தி.மு.க. கூட்டணியும் தேர்தலை சந்திக்க தயாராகி விட்டது என்று தான்கூற வேண்டும்.


தேர்தலை மையமாகக் கொண்டேனும் தி.மு.க. கூட்டணி காவிரி திறக்கப்பட வேண்டு மென்று கோஷமிடத் தவறாது.

இதேவேளை கர்நாடகாவில் காங்கிரஸ்

**அ. கலைவாணி**

கூட்டணியே ஆட்சியிலிருப்பதும் தெரிந்த விடயம் எனவே தி.மு.க. கூட்டணி மத்திய அரசிடம் வலியுறுத்தும்போது காவிரி திறக்கப் பட்டாலும் ஆச் சரியப்படுவதற்கில்லை.

அதனால்தான் தமிழக முதமைச்சர் காவிரி நீர்ப் பிரச்சினையில் மௌனம் காத்து வருகின்றாரா..... என்பதும் சந்தேகமே. என்றாலும் காவிரிநீர்ப் பிரச்சினையை எப்படி கையாளப்



போகின்றார்...... சட்டசபைத் தேர்தலை எப்படி நடாத்தி முடிக்க போகின்றார்....என்பதே இன்று தமிழக முதலைமைச்சர் எதிர் கொண்டுள்ள சங்கடமான நிலை என்றால் அதுமிகையில்லை எனலாம்.




# விளையாட்டு அரங்கு

ஜெயந்திரன்

**பிரேசில்,** உலகில் சிறந்த கால்பந்து வீர்களை மட்டுமன்றி கார்ஓட்டப் பந்தய வீரர்களையும் உருவாக்கித்தந்துள்ளது.

கார் ஓட்டப்பந்தயங்களில் ஏற்பட்ட அனர்த்தங்களினால் மரணத்தைத் தழுவியவர்களான அயர்ட்டன் சென்னா, நெல்சன்




பிக்கட், எமர்சன் பிட்டிபல்ட் ஆகியோர் அந்நாட்டின் சிறந்த பந்தய வீரர்களாவர்.

அது போன்றே பிரேசிலில் முதல்தர கால்பந்தாட்ட வீரர்களும் தோன்றியுள்ளனர். அவர்களுள் றொனால்டோ , பேலேக்குப்பின் திறமையானவீரர் என இனங்காணப்பட்டார். எனினும் அண்மையில் றொனால்டோ தொடர்பான சூடான செய்தியொன்று ஊடகங்கள் மூலம் வெளியாகியுள்ளது. அது அவர் பிரேசிலின் கொடியின் கீழ் கார் ஓட்டப் பந்தயங்களில் ஈடுபடவிருப்பதான செய்தியாகும் .

அடுத்த வருடம் ஜேர்மனியில் உலகக்கிண்ண உதைப்பந்தாட்டப்போட்டிகள் நடைபெறவுள்ள நிலையில் றொனால்டோவின் இந்தத் திடீர் அறிவிப்பானது அந்நாட்டின் உதைப்பந்தாட்டத்துறை அதிகாரிகளையும், மெட்றிட் கழகத்தையும், ரசிகர்களையும் பெரும் அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது. இவ்வருடம் செப்ரெம்பர் முதல் 2006 மார்ச் வரை நடைபெறவிருக்கும் "ஏ-1" என்றழைக்கப்படும் சர்வதேச தரம் வாய்ந்த போட்டித் தொடரிலேயே அவர் பங்கேற்கப்போவதாக அறிவித்துள்ளார். அதனால் அவர் கால்பந்தாட்டத்துக்கு முக்கியத்துவம் அளிக்காது கார் ஓட்டப் பயிற்சிகளில் ஈடுபட்டு வருகிறார்.

1976ஆம்ஆண்டு பிரேசிலில் பிறந்த இவர் தனது 16 ஆவது வயதில்57 கால்பந்தாட்டப் போட்டிகளில் பங்கேற்று 59 கோல்களைப் போட்டார். 17 வயதில் பிரேசில் அணிக்காக விளையாடும் வாய்ப்பைப் பெற்றுக்கொண்ட இவர் 1994 ஆம்ஆண்டு அமெரிக்காவில் நடைபெற்ற உலகக்கிண்ணப்போட்டிகளில் பங்கேற்கும் வாய்ப்பையும் பெற்றார். அத் தொடரில் பிரேசில் கிண்ணத்தையும் கைப்பற்றியது.

றொனால்டோவின் திறன் ஜப்பான் - கொரிய நாடுகளில் 2002ஆம் ஆண்டு நடைபெற்ற உலகக்கிண்ணப் போட்டிகளிலேயே வெளிப்படுத்தப்பட்டது. பிரேசில் கிண்ணத்தைக் கைப்பற்ற உதவிய எட்டு கோல்களையும் இவரே அடித்தார். இவர் 1996,1997,2002 ஆண்டுகளில் சிறந்த வீரராகவும் 1997, 2002 ஆகிய வருடங்களில் சிறந்த ஐரோப்பிய வீராகவும் தெரிவுசெய்யப்பட்டார். தற்போது கார்ப் பந்தயங்களில் ஈடுபடப் போகும் இவரது திறன் இது போலவே சிறந்து விளங்குமா என்பதற்கான விடையை எதிர்காலமே கூறும்.

**வடிவேல்**

"**சாம்பல்**கிண்ணம்" என வர்ணிக்கப்படும வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஆஷஸ் தொடர் ஆரம்பமாவதற்கு இன்னும் இரண்டு நாட்களே எஞ்சியுள்ளது.

இம்முறை இங்கிலாந்து அணி என்றுமில்லாதவாறு விஸ்பரூபம் எடுத்துள்ளமை அவுஸ்திரேலிய அணிக்குக் கலக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

அவுஸ்திரேலிய- இங்கிலாந்து அணிகளுக்கிடையில் இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும் டெஸ்ட் கிரிக்கெட் ரசிகர்களால் மிக அதிகம் எதிர்பார்க்கப்படும் தொடர். இது ஐந்து போட்டிகள் கொண்டது. 21ஆம் திகதி லண்டன் லோட்சில் முதலாவது போட்டி தொடங்குகின்றது.

ஆஷஸ் தொடரை பொறுத்தவரை அவுஸ்திரேலிய அணியின் ஆதிக்கம் கொடி கட்டிப் பறக்கிறது. வரிசையாக எட்டுமுறை தொடரைக் கைப்பற்றி சர்வாதிகாரம் நடத்துகிறது. 1986/ 1987 மைக் கேட்டிங் தலைமையில் இங்கிலாந்து அணி கடைசியாக ஆஷஸ் தொடரைக் கைப்பற்றியது. அதன் பின்னர் போராடத்தான் முடிந்ததே தவிர தொடரைக் கைப்பற்ற முடியவில்லை.

கடந்த முறை (2002/ 2003 ஆம்ஆண்டு) ஆஷஸ் தொடர் அவுஸ்திரேலியாவில் நடைபெற்றபோது இங்கிலாந்து அணியில் புதுமுகமாக கலக்கியவர் தற்போதைய அணித்தலைவர் மைக்கல் வோகன். அந்த தொடரில் அவர் மூன்று சதங்கள் அடித்து அனைவரது கவனத்தையும் ஈர்த்தார். ஆனாலும் அவுஸ். 4-1 என்ற கணக்கில் தொடரை கைப்பற்றியது. இதிலிருந்து இங்கிலாந்து அணி புரிந்து கொண்டது. தனிநபர் ஆட்டம் வெற்றிக்கு உதவாது என்பதை.


இந்த நிலையில் இங்கிலாந்து அணி இம்முறை வலுவான அணி ஒன்றை அறிவித்துள்ளது. இது அவுஸ்திரேலியா அணியை சிந்திக்க வைத்துள்ளது.

குறிப்பாக இங்கிலாந்து சுற்றுப்பயணம் அவுஸ்திரேலிய அணிக்கு கசப்பான அனுபவங்களை கொடுத்துள்ளதால் இம்முறை ஆஷஸ் தொடரை இழந்து விடுவோமோ என்ற பதற்றத்தையும் அதிகரித்துள்ளது.



இதற்குமேலாக 1934 ஆண்டுக்கு பின்னர் லோட்ஸ் மைதானத்தில் டெஸ்ட் தோல்வியை அவுஸ். அணி சந்திக்காததால் இத்தொடர் மேலும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

## போரா? போட்டியா?




இப்படியாக பல்வேறு கருத்துக்களுக்கு மத்தியில் அவுஸ்திரேலிய பயிற்சியாளர் புக்கானன் அணி பற்றி தெரிவிக்கையில்:

ஓரிரு போட்டி முடிவுகளை வைத்து ஒரு அணியின் திறமையை முடிவு செய்து விட வேண்டாம். தோல்விகளும் விளையாட்டின் ஒரு பகுதிதான்.

வங்கதேச அணியை நாங்கள் எப்போதுமே குறைவாக மதிப்பிட்டதில்லை. வளர்ந்துவரும் அணி அது திறமையான இளம் வீரர்கள் நிறையப்பேர் இருக்கிறார்கள். இங்கிலாந்தும் அப்படித்தான்.

சமீப காலமாக அந்த அணியில் நிறைய மாற்றங்களைக் கவனிக்க முடிகிறது. வங்கதேசமும் இங்கிலாந்தும் வெல்கிறது என்றால் அவர்கள் தங்கள் திறமையை கணிசமான அளவுக்கு வளர்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்றுதான் நினைக்கிறேன். அவர்களது திறமைக்கு மதிப்புக் கொடுக்க வேண்டும்.

நிச்சயமாக இதெல்லாம் ஒரு பகுதி மட்டுமே எங்கள் ஆட்டத்திலும் சில குறைபாடுகள் இருக்கின்றன உண்மைதான்



அவற்றை திருத்திக்கொண்டு ஆஷஸ் தொடரில் களமிறங்குவோம் எங்கள் கவனமெல்லாம் இப்போது ஆஷஸ் டெஸ்ட் மீது தான்.

ஒரு தோல்வி கிடைக்கின்றது என்றால் எதனால் தோற்றோம், என்னென்ன தவறுகள்செய்தோம் என்று அலசி ஆராயக் கூடியவர்கள் நாங்கள். கடந்த சில போட்டிகளில் நாங்கள் தோற்றதற்கு எங்கள் வீரர்கள் சிலரின் மோசமான ஆட்டமும் ஒரு காரணம் என்றார். □

# மாகாணப் போட்டியும் அனுபவமும்

**வவுனியாவில்** கடந்த வாரம் நடைபெற்றுமுடிந்த பாடசாலைகளுக்கிடையிலான வடக்கு-கிழக்கு மாகாண விளையாட்டுப்போட்டிகளில் கலந்து கொண்ட கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த பாடசாலை அணிகள் பல போட்டிகளில் கலந்து கொண்டபோதும் முதல் இரண்டாவது இடங்களை பெறமுடியாது வெளியேறின.

இது இன்று நேற்று தொடரும் நிகழ்வல்ல காலம் காலமாக நடைபெறும் ஒன்றுதான். ஆனால் [illegible] ன நிவர்த்தி செய்து சாதிக்க வேண்டும் என்று வீரர்கள் நினைத்து முன்வருகின்றார்களா என்றால் அது இன்றுவரை கேள்வியாகத்தான் இருக்கின்றது..

போட்டியில் தோல்வியை சந்தித்துவிட்டு வேதனையை வெளிப்படுத்தினால் மட்டும் போதாது. சாதிக்க வேண்டும் என்ற உறுதி தவறுகளை திருத்திக்கொள்ளும் மனப்பாங்கு என்பவற்றில் வீரர்கள் உறுதி எடுத்துக்கொள்ளவேண்டும்.

இந்த வகையில் வடக்கு கிழக்கு மாகாண கரப்பந்து போட்டியில் கலந்து கொள்ளும் வாய்ப்பை பெற்ற கிளி. பற்றிமா றோமன் கத்தோலிக்க 17 வயது பெண்கள அணித் தலைவி கேதீஸ்வரன் ஈஸ்வரப்பிரியா தனது அனுபவங்களை பகிர்ந்துகொண்டார் அவர் தெரிவிக்கையில்,

எமது முதலாவது மாகாணப்போட்டி யாழ். சங்கானை சைவப்பிரகாச வித்தியாலய அணியோடு இடம்பெற்றது. அதில் நாம் கடும் போட்டியின் மூலம் வெற்றிபெற்றோம். இதன்போது எமது வேறு குழுக்களின் ஆட்டங்களை பார்த்தபோது திருகோணமலை மிகிந்தபுர வித்தியாலய அணி கடும்பயிற்சி பெற்று வந்திருந்ததை அவதானித்து பயந்தோம். அதனுடன் தான் அடுத்தபோட்டி என்று சொன்னதும் எமக்கு கைகால்கள் விறைத்தது போலானது. அதேபோன்று தொடராக அடுத்தடுத்து இரண்டு செட்களிலும் தோற்றோம் பின்னர் அவ் அணியே எமது வயதுப் பிரிவில் சம்பியனானது.இதிலிருந்து உணர்ந்தோம் இது எமது வெற்றிக்கான படிக்கல் என்று



**மாகாண மட்டப் போட்டியில் கலந்து கொண்டதன் மூலம் எவ்வாறான புதிய அனுபவங்களைப் பெற்றிருக்கின்றீர்கள்?**

மாகாண மட்டப் போட்டியில் கலந்துகொண்டதே எமது புதிய அனுபவம் தான். அதிலும் நாம் சந்தித்த போட்டிகளின் மூலம் நாம் நிறைய அனுபவங்களைப் பெற்றிருக்கின்றோம். எமது பலம் . பலவீனம் எம்மிடம் வளர்க்கப்பட வேண்டிய திறன்களும் பயிற்சிகளும் நிறையவே இருக்கின்றன. என்பதை களத்தில் நாம் நின்று பட்ட அவஸ்தை யின் மூலம் நிறையவே பெற்றிருக்கின்றோம்.

**நீங்கள் மாகாண மட்டப் போட்டிக்குச் செல்ல முன்பு உங்களை ஏன் உயர் தரத்துக்கு தயார்ப்படுத்த முடியாமல் போனது?**

எமது ஆசிரியர் அடிக்கடி மாகாணமட்டப் போட்டியில் மாணவர்களின் விளையாட்டுத்தரம் எந்தளவுக்கு உயர்வானது என்பதைக்கூறுவது மட்டமல்லாது படங்களை கூட காட்டி கடும் பயிற்சிகளை அளிக்க முன்வரும் போது நாம் தான் பின்னடித்தோம் . எமது விளையாட்டு போதுமானது என்ற எண்ணமே களமிறங்கும் வரையிலும் எம்மிடம் இருந்தது. இப்போதுஅந்த எண்ணம் முற்றாகவே மாறிவிட்டது. அன்றிலிருந்து முடிவெடுத்துவிட்டோம் நாமும் கடும் பயிற்சிகளின் மூலம் உயர்தரத்தை அடைந்து அடுத்த மாகாணப் போட்டிகளில் துணிந்து விளையாடுவோம் என்றவெறி எம்மோடு ஒட்டியிருக்கிறது.

**நீங்கள் உங்கள் விளையாட்டின் தரத்தை உயர்த்துவதானால் என்ன நடவடிக்கைகளை மேற்கொள்வீர்கள்?.**

நாம் வழமையாகவே போட்டிகள் நடைபெற சில காலத்தின் முன்பே பயிற்சிகளை ஆரம்பிப்போம். போட்டிகள் முடிவடைந்ததும் விட்டுவிடுவோம். இது இனி ஒழிக்கப்பட்டு தொடர்பயிற்சியில் ஈடுபட உத்தேசித்துள்ளோம். இதன் மூலம் தான் நாம் ஓரளவு வெற்றித்திசையை அண்மிக்க முடியும். இதற்கு எமது பயிற்சி ஆசிரியரும், அதிபரும் அனுமதி தந்திருக்கின்றார்கள்.

**இவ் விளையாட்டை முன்னெடுக்க செய்யும் முயற்சிகள் கல்விக்கு தடையாக அமையுமென நினைக்கிறீர்களா?**

ஒரு போதும் இல்லை. இதுவரையும் எமது பயிற்சிகள் மாலை நேரங்களிலும், விடுமுறை நாட்களிலும் அதிகாலை வேளையிலுமே நடைபெற்றன.அது மட்டுமல்ல நாம் வகுப்பு ரீதியில் கூட முன்னணி மாணவர்களாகவே திகழ்கின்றோம். இதனைத் தொடர்ந்தும் காப்பாற்றுவோம் நிச்சயம் கல்வியை இவ்விளையாட்டு எந்த வகையிலும் பாதிக்காது என்பதை மனந்திறந்து கூறுகின்றேன். போட்டியும் வெற்றிபெறும் உணர்வும் விளையாட்டினூடாகவே கல்வியினுள் புகுத்தப்படுகிறது என்பது எமது அனுபவ உண்மை.

# பளையில் ஊரி மண் அகழ்வினால் கிணறுகள் உவர் நீராகும் ஆபத்து!

## -தடுத்து நிறுத்தக் கோரல்

(வடமராட்சி கிழக்கு)

பளை தம்பகாமம் பகுதியில் உள்ள ஆற்றங்கரைகளில் பைக்கோ மூலம் ஊரிமண் வெட்டிச் செல்லப்படுகின்றது. இதனால் தம்பகாமம் பகுதியில் உள்ள விளைநிலங்கள், தோட்டத் தரைகள், நல்ல நிலையில் உள்ள குடி தண்ணீர் கிணறுகள் எல்லாம் உவர் நிலமாகவும், உவர் நீராகவும் மாறும் அபாயநிலை ஏற்பட்டுள்ளது.

இவ் ஊரிஅகழ்வு இப்படியே தொடருமானால் தம்பகாமம் கிராமத்தில் மாரியில் உவர் நீர் உட்புகும் அபாயமும் உள்ளது. இது சம்பந்தமாக அக்கிராம மக்கள் பச்சிலைப்பள்ளி பிரதேச சபையிடம் முறையிட்டுள்ளனர். ஆயினும் உரிய நடவடிக்கை எடுத்ததாகத் தெரியவில்லை என்று அக்கிராம மக்கள் குற்றம் சாட்டுகின்றனர். இதில் உரியவர்கள் உடன் நடவடிக்கையினை எடுக்க வேண்டும் என்றும் அவர்கள் வேண்டி நிற்கின்றனர். (11)

## பொதுநோக்கு மண்டபம் திறப்பு

சிலாவத்தை தெற்கு தியோகுநகர் தற்காலிக குடியிருப்பில்போறூட் நிறுவனத்தால் அமைக்கப்பட்ட பொதுநோக்கு மண்டபம் கடந்த வாரம் திறந்துவைக்கப்பட்டது.

சிலாவத்தை தெற்கு கிராமத்தலைவர் ஜெ.பிலிப்றேமன் தலைமையில் ஆரம்பமான நிகழ்வில் மங்கல விளக்கு, தேசியக் கொடி யேற்றலைத் தொடர்ந்து பெயர்ப்பலகையினை போறூட் நிறுவன திட்டமுகாமையாளர் ஆர்னே, திரைநீக்கம் செய்தார். கட்டடத்தினை போறூட் நிறுவன பதில்திட்ட முகாமையாளர் திறந்து வைத்தார். (20)

# இளைஞர், யுவதிகளுக்கு தொழிற்பயிற்சி

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் வவுனியாமாவட்ட கிளையினால் கடந்த வெள்ளிக்கிழமை 75 இளைஞர், யுவதிகளுக்கு தொழிற்பயிற்சி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதற்கான நிதியினை வூஸ் அமைப்பு வழங்க முன்வந்துள்ளது. இதற்கான ஆரம்ப நிகழ்வு வவுனியா தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் காரியாலயத்தில் நடைபெற்றது.

இந்தப் பயிற்சி நெறியில் கணனி பயிற்சியும், அலுமினிய குழாய் இணைப்பு மற்றும் மேசன் பயிற்சியும் வழங்கப்பட இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் பயிற்சி நெறியில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கும், பின் தங்கிய மாணவர்களுக்கும், விதவைப் பெண்களுக்கும் முன் உரிமை வழங்கப்படும் என நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார். (32)


நம்பிக்கை-நாணயம்-உத்தரவாதம்

P.I. பனாண்டோ

கண் பரிசோதித்து கண்ணாடி வழங்கப்படும்

சிறந்த முறையில் பற்களை கட்டிடவும்,

மிதப்பு பற்களுக்கு 6 மாதத்திலுள் உட்செல்லும்

விதமாக கிளிப் பொருத்திகொள்ள

பற்களை சுத்தப்படுத்த நீங்கள்

நாடவேண்டிய நம்பிக்கையான ஒரே

நிறுவனம்.

P.I.Fernando,

23 பஸ்நிலையம்,யாழ்ப்பாணம்.

phone-0777.158087 prop E. Surendran.



(சி.12364)


# நிவாரணம், புனர்வாழ்வு, நல்லிணக்க அமைச்சு

## வடக்கு கிழக்கு மாகாண சபை

## வடக்கு கிழக்கு சமுதாய மீளமைப்பு மற்றும் அபிவிருத்தி திட்டம் – II (நீகோட் – II)

நிதி-ஆசிய அபிவிருத்தி வங்கி

ஆஅவ கடன் இல:- 2168-சிறீ (எஸ்எவ்)

# கேள்வி அறிவித்தல் - இல:47

# குடிசார் வேலைகளைப் பெறுதல்

01. வடக்கு கிழக்கு சமுதாய மீளமைப்பு மற்றும் அபிவிருத்தி திட்டம் (NECORD - II) ஆகுசெலவு சார்பாகப் பலதரப்பட்ட நாணயங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து ("ஆ.அ.வ") கடனொன்றை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளதுடன், கீழேயுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள நிர்ம ்ண வேலைகளுக்கான ஒப்பந்தங்களின் கீழ் தகுதிவாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக்கடனின் வரும்படிகளின் பகுதி பிரயோகிக்ச ்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

02. இதன் பின்னால் தொழில்தருநராக குறிப்பிடப்படும் NECORD திட்டக் கேள்விச் சபைத் தலைவரால் பின்வரும் வேலைகளுக்கு தகுதிவாய்ந்த ஒப்பந்தக்காரரிடமிருந்து பொறிவைக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

## அட்டவணை

| தொ இல. | ஒப்பந்த இனங் காட்டல் இல | ஒப்பந்தத்தின் பெயர் | ஆககுறைந்த ICTAD பதிவு | கேள்விப் பிணைப்பணம் (ரூபா) |
|---|---|---|---|---|
| 01 | KN/NECORD-II/HS/01 | கிளிநொச்சி மாவட்டபொது வைத்தியசாலையில் வைத்திய, தாதிகள் மற்றும் துணைவைத்திய உத்தியோகத்தர்களுக்கான இருவிடுதி அலகுகள் மற்றும் நான்கு குடும்பஅலகுகள் நிர்மாணம் | M4 | 475,000/= |

03. பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்தக்காரர்களும் கேள்வி கோருவதற்குத் தகுதியுடையவர்கள். நிர்மாணப் பயிற்சி, அபிவிருத்தி நிறுவனத்தினால் (ICTAD) விருத்தி செய்யப்பட்ட தேசிய நிருமாண ஒப்பந்தக்காரர் பதிவு, தரப்படுத்தல் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்தக்காரராகப் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும். இலங்கை தேசிய நிர்மாண ஒப்பந்தக்காரர் சங்கத்தின் (இ.தே.நி.ஒ.ச.) உறுப்பினராக (ICTAD டுடன் M4 (கட்டடங்கள்) க்கு மேல் பதிவு செய்தவர்களுக்கு மட்டும் ) விளங்க வேண்டும் அல்லது வெளிநாட்டு ஒப்பந்தக்காரர்களுடைய நாடுகளிலுள்ள பிரசித்தி பெற்ற சங்கங்களால் வழங்கப்பட்ட இதற்குச் சமமான பதிவுச் சான்றிதழ்களைக் கொண்ட ஆசிய அபிவிருத்தி வங்கயின் அங்கத்துவ நாடொன்றினைச் சேர்ந்த வெளிநாட்டு ஒப்பந்தக்காரராக இருக்க வேண்டும்.

04. ஆர்வமுள்ள தகுதிவாய்ந்த கேள்விகோருவோர் கேள்வி தொடர்பான மேலதிக தகவல்களை **திட்டப்பணிப்பாளர், நீகோட் திட்டம், 55, கந்தசுவாமி கோவில் வீதி, திருகோணமலையில்** பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி: 026-2227434. ∴பக்ஸ் :026-2227401. இணையதள முகவரி: www.necord.org ஈமெயில்: necord@sltnet.lk )

05. கேள்வி ஆவணங்களை **18.07.2005** இலிருந்து **08.08.2005** வரை **காலை 9.30** இலிருந்து **மாலை 3.00** மணி வரை வேலை நாட்களில் மேற்படி அலுவலகத்திலிருந்து மீளளிக்கப்படாத கட்டணத்தின் கொடுப்பனவு ரூபா **5000/-** ஐச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

06. இருபொறிவைக்கப்பட்ட உறைகளில் தனியாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விலையிடப்பட்ட கேள்வியையும், கேள்விகோருவோரின் முன் தகுதிக்கு அவசியமான ஆவணத்தையும் கேள்விகள் கொண்டிருக்க வேண்டும் என்பதுடன், இதன் தொடர்பாக பந்தி 7 இல் குறிப்பிட்டுள்ள இடம் திகதி மற்றும் நேரம் ஆகியவற்றுக்கு ஏற்ப ஒப்படைக்கப்பட வேண்டும்.

07. பொறிவைத்த கேள்விகள் யாவும் **தலைவர், திட்ட கேள்விச்சபை, "நீகோட்", 55, கந்தசுவாமி கோவில் வீதி, திருகோணமலை** என்ற விலாசமிடப்பட்டு, 15.08.2005 பி.ப. 2.00 மணிக்கு முன்பதாக கிடைக்க வேண்டும். இதன் பின்னர் உடனடியாக கேள்விகள் திறக்கப்படும். அப்பொழுது கேள்விதாரர்கள் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்க முடியும்.

08. முன்கூட்டியே கேள்வி கோரல் பற்றிய கூட்டமொன்று **நீகோட் திட்ட காரியாலயம், 55, கந்தசுவாமி கோவில் வீதி, திருகோணமலையில் 08.08.2005** ஆந் திகதி அன்று பி.ப. 2.00 க்கு நடைபெறும்.

09. கேள்விகள் தயாரிப்புக்கு அல்லது ஒப்படைப்புக்கு கேள்கோருவோருக்கு ஏற்படும் ஏதாவது ஆகுசெலவுகளுக்கு அல்லது செலவீனங்களுக்கு தொழில்தருநர் பொறுப்பாகமாட்டார்.

**த.லங்காநேசன்,**
**தலைவர், கேள்விச் சபை,**
**நீகோட் திட்டம்,**
**55, கந்தசுவாமி கோவில் வீதி,**
**திருகோணமலை.**

(சி.12369)


9 ஆம் ஆண்டு நீங்காத நினைவில்

தாயின் மடியில் 04 03 1970

தாயக மண்ணில் 19 07 1996



மேஜர் புலிக்குட்டி (கரி)

ஆனந்தராசா ஜெயமோகன்

புகையிரத நிலையவீதி,ஓமந்தை,வவுனியா.

(முல்லை.ஓயாதஅலை தாக்குதலின்போது)

தாயை விட தாய்மண்ணை நேசித்து

தானைத்தலைவன் சேனைதனில்

புலியாகிப் போராடி

களம் தனிலே புயலென புரியவைத்த

புலிக்குட்டியே!

நீ மறைந்து ஆண்டுகள் ஒன்பது

ஆனாலும் மறையாத உன்

நினைவுகளுடன்.

தகவல:

பெற்றோர்,சகோதரர்கள்,

போராளிகள்.

(6353)




வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த வெற்றிச் சமரிலே
வீரச்சாவைத் தழுவிக்கொண்ட
315 மாவீரர்களுக்கும் வீரவணக்கம்

இச்சமரானது கனரக ஆயுத தளபாடங்களை எமக்குப் பெற்றுதந்த பெரும் சமராகப் போற்றப்படுகின்றது.

போரியல் ரீதியாகப் பெரும் திருப்புமுனையை ஏற்படுத்திய தமிழீழ விடுதலைப்புலிகளின் பலத்தை எதிரிக்கும், உலகத்துக்கும் எடுத்துக்காட்டிய நாளான இன்று நாம் நினைவுகூர்ந்து நிற்கின்றோம்.




(சி-12368)






தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடன் இத்தாலி நாட்டிலுள்ள திலீபன் தமிழ்ச்சோலை சிறுவர்களின் வருடாந்த மெய்வல்லுனர் போட்டி நிகழ்வுகள் அண்மையில் இடம்பெற்றன.

## மாகாணமட்ட கூடைப்பந்து, கிரிக்கெட்போட்டி
## மட்டக்களப்பு மாவட்ட அணிகள் சம்பியன்

வடக்கு-கிழக்கு மாகாணமட்டத்தில் நடத்தப்பட்ட மென்பந்து கிரிக்கெட்போட்டியில் மட்டக்களப்பு மாவட்ட அணி சம்பியனாகியுள்ளது. மட்டக்களப்பு அணி இறுதிப்போட்டியில் மன்னார் மாவட்ட அணியை எட்டு ஓட்டங்களால் வெற்றி கொண்டது. இதே வேளை நேற்று முன்தினம் நடைபெற்ற கூடைப் பந்தாட்டப் போட்டியிலும் ஆடவர்பிரிவிற்கான போட்டியில் மட்டக்களப்பு மாவட்ட அணி சம்பியனாகியுள்ளது.

15 ஓவர் மட்டுப்படுத்தப்பட்ட கிரிக்கெட் போட்டியில் மட்டக்களப்பு மாவட்ட அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

இதன்போது மட்டக்களப்பு மாவட்ட அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 63 ஓட்டங்களைப்பெற்றது. பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய மன்னார் மாவட்டஅணி 55 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது.

இதேவேளை கூடைப்பந்தாட்டப்போட்டி மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரியில் இடம்பெற்றது. இறுதிப்போட்டியில் மட்டக்களப்பு மாவட்ட அணியும் வவுனியா மாவட்ட அணியும், மோதின. இதில் வவுனியா மாவட்ட அணி 7.6 புள்ளிகளையும், மட்டக்களப்பு மாவட்ட அணி 107 புள்ளிகளையும் பெற்றன. இதனடிப்படையில் 31 புள்ளிகளால் மட்டக்களப்பு மாவட்ட அணி வெற்றிபெற்றது. இதில் மட்டக்களப்பு மாவட்ட அணியைச் சேர்ந்த எம்.கே. றிசான் 26 புள்ளிகளைப் பெற்றுக்கொடுத்து தனது அணியின் வெற்றிக்கு வழிகோலினார். வெற்றிபெற்ற அணிகளுக்கான வெற்றிக்கேடயங்களை மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர்

## எல்லைப்படை மாவீரர் நினைவு
## கழகங்களுக்கிடையிலான தாச்சிப்போட்டி

உடையார்கட்டுப் பிரதேசத்தில் எல்லைப் படை மாவீரர் குடும்பங்களைக் கௌரவிக்கும் நிகழ்வை முன்னிட்டு எல்லைப்படை மாவீரர் நினைவு தாச்சிப்போட்டி உடையார்கட்டுப் பிரதேச விளையாட்டுக் கழகங்களிடையே நேற்று முன்தினம் சுதந்திரபுரம் கொலனி மைதானத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்விற்கான பொதுச்சுடரினை எல்லைப்படை மாவீரர் ஒருவரின் தந்தையான நா.சிவலிங்கமும், சகோதரரான சாந்தகுமாரும் ஏற்றிவைக்க தமிழீழ தேசியக்கொடியை உடையார்கட்டு பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் புகழரசன் ஏற்றி வைத்தார்.

விளையாட்டு நிகழ்வை கிராம அலுவலர் சுந்தரலிங்கம் ஆரம்பித்து வைத்தார். பிரதேச தேசிய பேரவை உறுப்பினர் சிறிதரன் தலைமையில் விளையாட்டு நிகழ்வு நடைபெற்றது.

முதலாம் இடத்தை கலைமகள் கழகமும், இரண்டாம் இடத்தை மாணவர் இணையமும், மூன்றாம் இடத்தை நண்பர்கள் கழகமும் பெற்றுக்கொண்டன. (19)

## மாகாண மட்ட கராத்தே போட்டி

வடக்கு கிழக்கு மாகாண விளையாட்டுத் துறை அமைச்சினால் அண்மையில் மட்டக்களப்பில் நடாத்தப்பட்ட ஆண்கள் பெண்களுக்கான கராத்தே சுற்றுப்போட்டியில் பெண்கள் பிரிவில் மன்னார் மாவட்ட வீராங்கனை முதலிடம் பெற்றுள்ளார்.

தாழ்வுப்பாடு கிராமத்தைச்சேர்ந்த செல்வி பர்ணாந்து பீரிஸ் என்பவரே வடக்கு கிழக்கு மாகாணத்தில் முதலிடத்தைப்பெற்று அகில இலங்கைப்போட்டிக்குத் தெரிவாகியுள்ளார்.(18)


## கரைச்சிப் பிரதேச கழகங்களுக்கிடையிலான மெய்வன்மைப்போட்டி அடுத்த வாரத்தில்

கரைச்சிப்பிரதேச கழகங்களுக்கிடையிலான மெய்வன்மைப் போட்டிகள் எதிர்வரும் 26,27,ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளதாக கரைச்சிப் பிரதேச செயலர் அறிவித்துள்ளார்.

இதில் பங்குபற்றும் விளையாட்டுக்கழகங்களைப் போட்டிக்கான வீரர்களைத்தயார்படுத்துமாறும் அவர் கேட்டுள்ளார்.

இதேவேளை கிளிநொச்சி மாவட்ட கழகங்களுக்கிடையிலான மெய்வன்மைப் போட்டிகள் எதிர்வரும் 31,முதலாம் திகதிகளில் நடைபெறவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## பந்தை வீசி எறிவதாக லோசன் மீது குற்றச்சாட்டு



மேற்கிந்தியத் தீவுகள் அணி வீரர் ஜெர்மைன் லோசன் பந்துவீச்சில் சந்தேகம் எழுப்பப்பட்டுள்ளது.

கொழும்பில் சனிக்கிழமை முடிவுற்ற இலங்கைக்கு எதிரான முதல் கிரிக்கெட் டெஸ்ட் போட்டியில் எட்டு விக்கெட்டுகளைக் கைப்பற்றினார்23 வயதாகும் லோசன்.

ஆனால் அவரது பந்து வீச்சு முறையில் (எறிவதாக) சந்தேகம் உள்ளதாக கள நடுவர்கள் சைமன் டாஃபல், நதீம்காரி மற்றும் தொலைக்காட்சி நடுவர் பீட்டர் மானுவல் புகார் கூறியுள்ளனர். அதை அறிந்த போட்டி நடுவர் மைக் புராக்டர், சர்வதேச கிரிக்கெட் சபை (ஐசிசி), மேற்கிந்தியத் தீவுகள் அணிநிர்வாகம் ஆகியோருக்கு அத்தகவலைத் தெரிவித்துள்ளார்.

ஐசிசி புதிதாக மாற்றியமைத்துள்ள விதிமுறைப்படி பந்து வீச்சு இருக்கிறது என்பதை லோசன் தனிப்பட்ட விதத்தில் நிரூபிக்க வேண்டும்.

இது குறித்து ஐசிசியிடமிருந்து மேற்கிந்தியத்தீவுகள் கிரிக்கெட் சபை முறையான அறிக்கையைப் பெற்ற 21 தினங்களுக்குள் அவர் நிரூபிக்க வேண்டிய நிர்ப்பந்தத்தைப் பெற்றுள்ளார்.

இதற்கிடையே கண்டியில் வரும் 22 ஆம் திகதி தொடங்கும் இரண்டாவது டெஸ்ட் போட்டியில் அவர் விளையாடுவாரா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.



## பயிற்சிப்போட்டி சமனிலையில் பொண்டிங் கவலை தெரிவிப்பு



நாளை மறுதினம் லோட்சில் ஆரம்பமாகும் முதலாவது ஆஷஸ்கிண்ண டெஸ்ட் போட்டிக்கு முன்பாக நடைபெற்ற அவுஸ்திரேலிய இங்கிலாந்தின் லீசஸ்டசயர் அணிகளுக்கிடையில் நடைபெற்ற நான்கு நாள் பயிற்சிப்போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்ததால் அவுஸ்திரேலிய அணித்தலைவர் ரிக்கிபொண்டிங் கவலை தெரிவித்திருப்பதுடன், தனது வீரர்கள் திறமையை வெளிக்காட்டவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

எனினும் ஆரம்பமாகும் ஆஷஸ் தொடரில் தான் நம்பிக்கை வைத்திருப்பதாக கூறுகிறார்.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய லீசஸ்டசயர் அணி தனது முதல் இன்னிங்சில் 217 ஓட்டங்களில் ஆட்டமிழந்தது. அவுஸ்திரேலியாவின் பிரட்லீ நான்கு விக்கெட்டுக்களை வீழ்த்தினார். பதிலுக்கு தனது முதல் இன்னிங்சை தொடர்ந்த அவுஸ்திரேலியா பொண்டிங், லாங்கர், மார்ட்டின் ஆகியோர் பெற்ற சதத்தின் உதவியுடன் ஏழு விக்கெட்டுக்கள் இழப்பிற்கு 582 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தை நிறுத்திக்கொண்டது.

அடுத்து தனது இரண்டாவது இன்னிங்சை ஆரம்பித்த லீசஸ்டசயர் அணி இறுதி நாள் முடிவில் ஐந்து விக்கெட்டுக்களை மட்டுமிழந்து 363 ஓட்டங்களைப் பெற்றது. அவ்வணியின் வீரரும், மேற்கு அவுஸ்திரேலிய துடுப்பாட்ட வீரருமான கிறிப்றோஜர் 219 பந்துகளை சந்தித்து 33 பவுண்டரிகள் மூன்று சிக்சர் அடங்கலாக 209 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார். கிளெஸ்பி, கஸ்பரோவிச்,பிரட்லீ ஆகியோரால் இவரது விக்கெட்டை வீழ்த்த முடியாது போக மக்கில் அவரது விக்கெட்டை வீழ்த்தியதுடன் நான்கு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஆஷஸ் டெஸ்ட் தொடரை அவுஸ்திரேலியாவே கைப்பற்றும்


-ஜெப்லோசன்

இங்கிலாந்து கிரிக்கெட் அணி இதுவரை அவுஸ்திரேலிய அணிக்கு அழுத்தம் கொடுத்து வந்த போதிலும் ஆஷஸ் தொடரை அவுஸ்திரேலியாவே கைப்பற்றும் என முன்னாள் அவுஸ்திரேலிய வேகப்பந்துவீச்சாளர் ஜெப்லோசன் தெரிவித்துள்ளார்.

பி.பி.சிக்கு அளித்த பேட்டியில் அவர் குறிப்பிடும்போது இங்கிலாந்து இத் தொடரை வெல்லும் என்ற நம்பிக்கையிருப்பதாகவும், வீரர்கள் பலத்துடன் இருப்பதாகவும் தெரிவித்தார். ஆயினும் ஒருநாள் தொடரை இரண்டிற்கு ஒன்று என்ற ரீதியில் அவுஸ்திரேலியா வென்றதையும் குறிப்பிட்டுள்ளார். கடந்த இருசகாப்பதங்களாக பல அணிகள் அவுஸ்திரேலியாவிடம் தோல்வி கண்டபோதும் இங்கிலாந்து அணி வென்றமை நல்லநம்பிக்கையை ஏற்படுத்தியிருப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

## றியல் மட்றிட் அணி வெற்றி

றொனால்டோ உட்பட பல முன்னணிக் கால்பந்து வீரர்களைக் கொண்ட றியல் மட்றிட் அணி, அமெரிக்கா மற்றும் ஆசியாவில் சுற்றுப் பயணம் செய்து விளையாடவுள்ளது. இதன் ஒரு பகுதியாக ஆறு நட்பு ரீதியான காட்சி கால்பந்துப் போட்டியில் அந்த அணி ஆடுகிறது. மெக்சிகோவைச் சேர்ந்த சிவாஸ் குடலஜாரா அணிக்கு எதிராக றியல் மட்றிட் அணி முதல் காட்சி ஆட்டத்தில் ஆடியது. இதில் றியல் மட்றிட் அணி 3-1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

## மும்முனைப் போட்டியில் பங்கேற்கும் இந்திய கிரிக்கெட் அணி அறிவிப்பு




மும்முனை கிரிக்கெட் போட்டியில் கலந்து கொள்ள சிறிலங்காவுக்கு சுற்றுப்பயணம் செய்யும் இந்திய கிரிக்கெட் அணி அறிவிக்கப்பட்டுள்ளது. அணித்தலைவராக ராகுல்ராவிட் நியமிக்கப்பட்டுள்ளார். 16 பேர் கொண்ட அணியில் 16ஆவது வீரராக கங்குலி இடம்பெற்றுள்ளார்.

புதுமுகவீரர் இருவருக்கு வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது. சுரேஷ்ராணா, வேணுகோபால் ராவ் ஆகியோர் புதுமுக வீரர்கள் ஜெய்பி.யாதவும் இடம்பெற்றுள்ளார்.

அணிவிபரம்: ராவிட் (தலைவர்), சேவாக், லக்ஷ்மன், யுவராஜ்சிங், கைப்,ராணா, வேணுகோபால்ராவ், ஜெய்.பியாதவ், டோனி (விக்கெட்காப்பாளர்) கும்ளே, ஹர்பஜன், பதான், நெக்ரா, சஹீர்கான், பாலாஜி ஆகிய வீரர்கள் அணியில் இடம்பெறுகின்றனர்.

## சிந்தனைக்கு



உலக வரலாற்றில் எங்கும் எப்பொழுதும் நிகழாத அற்புதமான தியாகங்களும் அதிசயமான அர்ப்பணிப்புக்களும், எமது தாயக மண்ணில் நிகழ்ந்திருக்கின்றன.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 19-07-2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com

# இனியும் பேசுவதற்கில்லை!

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான அவசர மனிதாபிமானப் பணிகளை மேற்கொள்வதற்கான பொதுக்கட்டமைப்பு உயர் நீதிமன்றத் தீர்ப்பினால் செயலிழந்து போயுள்ளது. ஆகையினால் இது குறித்து இனிப் பேசிப் பயனில்லை என்ற முடிவிற்கு விடுதலைப்புலிகளும், தமிழ்க் கூட்டமைப்பினரும் வந்து விட்டதை உணர முடிகின்றது.

கிளிநொச்சியில் நேற்று முன்தினம் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப தமிழ்ச்செல்வன் அவர்களுக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையில் நடைபெற்ற கலந்துரையாடலின் பின்னர் பத்திரிகையாளர் மத்தியில் அவர் பேசும் போது இவ் உணர்வுகள் வெளிப்படுத்தப்பட்டன.

சிறிலங்கா அரசுடன் இனப்பிரச்சினை தொடர்பாகக் கடந்த காலத்தில் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைகள் யாவும் தோல்வியில் முடிவடைந்தன என்பது தெளிவானதொரு அறிதல் ஆகும். ஆகையினால் பேச்சுவார்த்தைகள் குறித்து பெருமளவில் சந்தேகங்கள் இருந்த போதும், சுனாமி அனர்த்த நிதி முகாமைத்துவக் கட்டமைப்புத் தொடர்பாக நடத்தப்பட்ட பேச்சுவார்த்தையில் சிலவேளை முன்னேற்றம் எதுவும் ஏற்படலாமா? என்ற மிகச்சிறிதளவான எதிர்பார்ப்பும் இருக்கவே செய்தது.

ஏனெனில் சுனாமி அனர்த்தம் தொடர்பான பொதுக் கட்டமைப்பானது இனப்பிரச்சினை தொடர்பான விடயத்தில் இருந்து பெருமளவு வேறுபட்டதாகும். அதாவது இனப்பிரச்சினை ஓர்கூர்மை பெற்ற அரசியற் பிரச்சினையாக இருக்கையில், பொதுக்கட்டமைப்போ முற்றிலுமாக மனிதாபிமானப் பிரச்சினையாக இருந்தது. ஆகையினால் இவ் விடயத்தில் சிலவேளை சிங்கள ஆட்சியாளர்கள் முன்னைய நிலைப்பாட்டில் இருந்து மாறுதலான நிலைப்பாட்டை மேற் கொள்ளலாம் என்ற எதிர்பார்ப்பே இதற்குக்காரணமாகும்.

ஆனால் பொதுக் கட்டமைப்புத் தொடர்பாக - உயர் நீதிமன்றம் விதித்துள்ள இடைக்காலத் தடையானது மனிதாபிமான விடயத்திலும், சிறிலங்கா அரசு தமிழர் விவகாரத்தை நடுநிலையுடனும், மனித நேயத்துடனும் அணுகுவதற்குத் தயாராக இல்லை என்பதையே வெளிக்காட்டுவதாய் இருந்துள்ளது.

இந் நிலையிலேயே தமிழர் தரப்பு பொதுக்கட்டமைப்பு விடயத்திலும், நம்பிக்கை இழந்ததொன்றாக, இனிப் பொதுக் கட்டமைப்புக் குறித்து சிறிலங்கா அரசாங்கத்துடன் பேசுவதில் பயன் ஏதும் இல்லை என்ற கட்டத்திற்கு வந்துள்ளது. அதாவது சிறிலங்கா அரசு ஏதோ ஒரு வழி முறையில் தமிழர் தரப்புடனான எந்த இணக்கப்பாடும் எட்டுவதைத் தடுத்து விடும் என்ற முடிவே பொதுக் கட்டமைப்புக் குறித்து இனியும் பேசிப் பயனில்லை என்ற தீர்மானத்திற்குக் காரணமாகும்.

ஆனால் சிறிலங்கா ஆட்சியாளர்களோ பொதுக் கட்டமைப்பு இன்னமும் செயற்பட்டுக் கொண்டிருப்பதாயும், அதில் இன்னும் சில படிகள் முன்னேற வாய்ப்புண்டு என்ற வகையிலும் கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர். இதில் சனாதிபதி சந்திரிகாவும் முக்கியமான ஒருவராவார்.

இதேவேளை அரசாங்கத்திற்கோ சனாதிபதி சந்திரிகாவிற்கோ பொதுக்கட்டமைப்பு முடக்கப்பட்டுள்ளமை தெரியாதொன்றல்ல. ஆனால் அவர்கள் சர்வதேசத்தின் முன்னாள் இம் முடக்கத்திற்கும் தமக்கும் தொடர்பில்லை என்பதாகக் காட்டிக் கொள்ள முனைந்து கொண்டிருக்கின்றார்கள். அத்தோடு பொதுக்கட்டமைப்பு செயற்படும் நிலையில் இருப்பதாகவும், காட்டிக்கொள்ள முற்படுகின்றனர். ஆகையினால் பொதுக்கட்டமைப்பு விடயத்தில் அடுத்த கட்டத்திற்கு முன்னேறலாம் என்பது போன்று அறிக்கைகளை விட்ட வண்ணம் உள்ளனர்.

சிறிலங்கா அரசில் பௌத்த பேரினவாத அமைப்புக்கள்-அரசாங்கம்-நீதித்துறை என்பன எவையும் தமக்குரிய தனித்துவங்களுடன் தனி அலகுகளாக இயங்குவதில்லை. அவை ஒவ்வொன்றும் ஒரே கொள்கையின் அடிப்படையில் ஒன்றை ஒன்று பாதுகாக்கும் வகையிலேயே இயங்குகின்றன. இதற்கு பொதுக் கட்டமைப்புத் தொடர்பாக உயர் நீதிமன்றம் விதித்த இடைக்காலத் தடையே உதாரணமாகக் கொள்ளத்தக்கது.

ஆகையினால் சிறிலங்கா அரசின் எந்த அலகுமே தமிழ் மக்களின் மனிதாபிமானப் பிரச்சினைகள் உட்பட எந்தப்பிரச்சினைக்கும் தீர்வு காணப்போவதில்லை. ஆகையினால் இனிப் பொதுக்கட்டமைப்புத் தொடர்பாக மட்டுமல்ல எந்த விவகாரம் தொடர்பாகவும் சிறிலங்கா அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்துவதில் பயன் ஏதும் உண்டா? என்பதே இன்று எழும் முக்கிய கேள்வியாகும்.

ஆனால் இது தற்பொழுது தான் தமிழ் மக்கள் மத்தியிலுள்ள கேள்வியல்ல. நீண்ட காலமாகவே உள்ளதொன்று தான். ஆனால் தற்பொழுது இது குறித்துச் சிந்திக்க வேண்டியவர்கள் இலங்கை இனப்பிரச்சினையில் அக்கறையை வெளிப்படுத்துபவர்களே ஆகும். ஏனெனில் அவர்கள் இன்னமும் இடையிடை சிறிலங்கா அரசாங்கம் மீது நம்பிக்கையை வெளிப்படுத்துபவர்களாகவுள்ளனர்.

-ராஜீவ்கொலை வழக்கில் இரு ஈழத்தமிழர்களை விடுதலை செய்து

# சென்னை உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பிற்கு இந்திய உச்ச நீதிமன்றம் தடையுத்தரவு

(புதுடில்லி)

ராஜீவ்கொலை வழக்கில் இரண்டு தமிழீழத் தமிழர்களை விடுதலை செய்து தமிழ்நாடு தலைமை நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவிற்கு இந்தியத் தலைமை நீதிமன்றம் தடை விதித்துள்ளது.

குற்றம் சாட்டப்பட்ட லிங்கம், வசந்தன் ஆகிய இருவரையும் சென்னை உயர்நீதிமன்றம் கடந்த ஏப்ரல் 25 ஆம் திகதி விடுதலை செய்தது. அவர்கள் இருவரும் தற்போது செங்கல்பட்டு தமிழீழத் தமிழர்கள் அகதிமுகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களின் விடுதலையை எதிர்த்து இந்திய புலனாய்வுத்துறை மேன்முறையீட்டு மனுத்தாக்கல் செய்தது.

தமது மனுவில் லிங்கம், வசந்தன் ஆகிய இருவரும் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் நெருங்கிய தொடர்பு உடையவர்கள் ராஜீவ் கொலை வழக்கில் அவர்களுக்கு முக்கிய தொடர்பு இருப்பதாக கூறப் பட்டிருந்தது.

இந்த மனு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

மனுவை விசாரித்த இந்தியத் தலைமை நீதிமன்றம் லிங்கம் மற்றும் வசந்தனை விடுதலை செய்து தமிழ்நாடு தலைமை நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவிற்கு தடை விதித்தது.

# விடுதலைப் புலிகளின் நிர்வாகப் பகுதிகளுக்கு பற்றறி,வயர்கள் கொண்டு செல்லத்தடை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் தமிழீழ விடுதலைப் புலிகளின் நிர்வாகப் பகுதிக்கு பற்றறி, வயர்கள் உட்பட மின்சார உபகரணங்களைக் கொண்டு செல் வதற்கு படையினர் தடை விதித் துள்ளனர்.

மின்சாரப் பொருட்களை எடுத்துச் செல்வதற்கு தடை விதித்துள்ள துடன் பொதுமக்கள் கடுமையான விசாரணைக்கு உட்படுத்தப் படுகின்றனர்.

பெண்கள் உட்பட அனைவரும் உடல் சோதனை செய்யப்படு கின்றனர்.

சிங்கள இராணுவத்தினரும் விசேட அதிரடிப்படையினரும் கூட் டாக இந்தச் சோதனைகளை மேற்கொள்கின்றனர். இதேவேளை மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங் களில் பாதுகாப்பு பலப்படுத்தப் பட்டிருப்பதாகவும் விடுதலைப் புலிகளின் நிர்வாகப் பகுதிக்குள் செல்லும் நுழைவாயில்கள் மிகவும் இறுக்கமாக கண்காணிக்கப்படுவ தாகவும் அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவித்தன.

மாங்கேணி, செங்கலடி, கறுத் தப்பாலம், மட்டக்களப்பு, மண்முனை, களுவாஞ்சிக்குடிப்பாலம் போன்ற பகுதிகள் ஊடாகச் செல்வோர் கடுமையான சோதனைக்குட்படுத்தப் படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை அம்பாறை மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் சரத் ஜெயசுந்தர நேற்று முன்தினம் காலை அக்கரைப்பற்று திருக்கோவில் பகுதிகளுக்கு பயணத்தை மேற்கொண்டு அப்பகுதி பாதுகாப்பு நிலைமைகள் தொடர்பாக ஆராய்ந்த துடன் ஏனைய அதிகாரிகளுடன் கலந்துரையாடி சோதனை நடவடிக்கைகளை தீவிரப்படுத்து மாறும் பணித்தார்.

# பொதுக்கட்டமைப்பை எதிர்த்து ஜே.வி.பி. 25 ஆம் திகதி ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

பொதுக்கட்டமைப்பு உடன் படிக்கை கைச்சாத்திடப்பட்டு ஒரு மாதம் நிறைவுறும் எதிர்வரும் 25ஆம் திகதி நாடு முழுவதும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை மேற்கொள்வதற்கு ஜே.வி.பி. தீர்மானித்துள்ளது.

வடக்கு- கிழக்கைத் தவிர்ந்த ஏனைய நகர்ப்புறங்களில் ஒரே சமயத்தில் அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களை மேற்கொள்வதற்கு தயாராகி வருகின்றனர் என்று ஜே.வி.பியின் பிரச்சாரச்செயலாளர் விமல் வீரவன்ச கூறினார்.

இந்த அரசை ஆட்சியில் இருந்து அனுப்பும் வரை தமது போராட்டம் ஓயப்போவதில்லையென்றும் பாராளுமன்ற சனநாயகத்தை மதிக்காத எவரும் இங்கு நிலையான ஆட்சியைக் கொண்டு நடத்த அனுமதிக்க முடியாது என்றும் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

ஜே.வி.பி. பொதுக்கட்டமைப்பை இரத்துச்செய்ய வேண்டும் எனக்கோரி தாக்கல் செய்திருந்த மனுவை ஏற்றுக்கொண்ட உயர்நீதிமன்றம் கடந்த வெள்ளிக்கிழமை அதன் சில சரத்துக்களுக்கு இடைக்காலத் தடையுத்தரவை விதித்தது. இந்த நிலையிலேயே ஜே.வி.பி. நாடளாவிய ரீதியில் தமது போராட்டத்தை நடத்தவுள்ளது. (32)

# அம்பாறையில் துப்பாக்கி ரவைகளுடன் பொலிஸ் கான்ஸ்டபிள் கைது

அம்பாறையில் பெருமளவு துப்பாக்கி ரவைகளை தன்வசம் வைத்திருந்த பொலிஸ் உப சேவை கான்ஸ்டபிள் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவரிடம் ஆயுதக்குழுவினருக்கு சொந்தமான ஆயுதங்கள் இருப்பதாக பொலிசாருக்குக்கிடைத்த தகவல்களுக்கு அமைய இவரின் வீட்டில் பொலிசார் தேடுதல்களை மேற்கொண்டுள்ளனர். எனினும் இவரின் வீட்டிலிருந்து ஆயுதங்கள் எதுவும் கண்டுபிடிக்கப்படவில்லை.

பின்னர் இவரின் சீருடைகள் வைக்கும் இடத்தை சோதனையிட்டபோது ஏ.கே. 47ரக ரவைகள் 149, ரி-56 ரக துப்பாக்கிகளுக்கு பயன்படுத்தும் ரவைக்கூடுகள்-5 மற்றும் சில பொருட்களை பொலிசார் கண்டுபிடித்துள்ளனர்.

தனது வீட்டுத்தோட்டத்திலிருந்து தான் இவற்றைக்கண்டுபிடித்ததாக சந்தேகநபர் தெரிவித்துள்ளார். இவரை அம்பாறை நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# உயர் நீதிமன்றத் தீர்ப்பினால் அரசு மிகவும் மகிழ்ச்சியடைந்துள்ளதாம்

## - சனாதிபதி செயலகப் பேச்சாளர் கூறுகின்றார்

பொதுக்கட்டமைப்பு தொடர்பான சிறிலங்கா உயர் நீதிமன்றத் தீர்ப்பினால் மிகவும் மகிழ்ச்சியடைந் திருப்பதாக சிறிலங்கா அரசு அறிவித்துள்ளது.

சிறிலங்கா சனாதிபதி செயலகப் பேச்சாளர் ஹரீம் பீரிஸ் இது குறித்து கூறியதாவது,

வெள்ளிக்கிழமையன்று பொதுக் கட்டமைப்புத் தொடர்பாக உயர் நீதிமன்றம் அளித்த தீர்ப்பால் நாம் மிகவும் மகிழ்ச்சியடைந்திருக்கிறோம். பொதுக்கட்டமைப்பை செயற்படுத்த தலைமை நீதிமன்றம் தடை ஏதும் விதிக்கவில்லை. அதில் சில சரத்துக்கள் குறித்து மட்டுமே உயர் நீதிமன்றம் கேள்வி எழுப்பியுள்ளது.

தொண்ணூறு சதவீத ஒப்பந்த சரத்துக்களை நீதிமன்றம் ஏற்றுக் கொண்டுள்ளது. அதனால் பொதுக் கட்டமைப்பைச் செயற்படுத்த நாங்கள் தயாராக இருக்கிறோம். பொதுக்கட்டமைப்பைச் செயற்படுத்த உயர் நீதிமன்றம் தடையேதும் விதிக்கவில்லை. அத்துடன் உயர் நீதிமன்றம் இடைக்காலத் தடை உத்தரவுதான் பிறப்பித்துள்ளது என்றார் அவர்.

# வவுனியா ~ மன்னார் வீதியில் படையினரின் கெடுபிடி அதிகரிப்பு

வவுனியா, மன்னார் சாலையில் சிறிலங்காப்படையினர் தமது காவலரண்களைப் புதுப்பித்து வருவதோடு இரவு வேளைகளில் இச்சாலையூடாகப் பயணிக்கும் வாகனங்களை சோதனையிட்டு வருகின்றனர்.

வாகனங்களில் பயணிப்போரிடம் அடையாள அட்டை சோதனை, உடற் சோதனை உள்ளிட்ட கெடுபிடிகளையும் ஏற்படுத்தி வருகின்றனர்.

இதனால் வாகனங்களில் பயணிப்போர் பலத்த அசௌகரியங் களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. வவுனியாவிலும் நீண்ட நாட்களாக குறைந்திருந்த மக்கள் மீதான படையினரின் கெடுபிடிகள் மீண்டும் அதிகரிக் கப்பட்டுள்ளன.

# சனாதிபதி மாளிகைப்பகுதியில் ஆர்ப்பாட்டம் நடத்தினால் சிறை!

## -பாதுகாப்பமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

சனாதிபதிமாளிகைப் பகுதியில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டால் இரண்டு வருட சிறை மற்றும் அபராதம் விதிக்கப்படும் என பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

சனாதிபதிமாளிகையை அண்மித்த பகுதிகள் அதியுயர் பாதுகாப்பு வலயமாக வர்த்தமானியில் பிரகடனப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து அப்பகுதிகளில் ஆர்ப்பாட்டங்கள், ஊர்வலங்கள், வாகனத் பேரணிகள், பொதுக்கூட்டங்கள் என்பன நடத்த முழுமையான தடை விதிக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இதனை் பிரகடனப்படுத்தியுள்ளார்.

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தினால் பாதுகாப்பு லயம் தொடர்பான விதிகள் கடந் 2001 ஆம் ஆண்டு நீக்கப்பட்ட பின்னர் தற்போது மீண்டும் அமுலுக்கு வருகின்றது. பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் சனாதிபதியால் கொண்டு வரப்பட்டிருக்கும் இந்த விதிகளை மீறுவோருக்கு இரண்டு வருட கால சிறைத்தண்டனை, அல்லது ஐயாயிரம் ரூபா அபராதம் அல்லது இரண்டும் விதிக் கப்படும் என்றும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

தற்போது அமுலுக்குக் கொண்டு வரப்பட்டுள்ள இந்த பாதுகாப்பு ஒழுங்கு விதிகள் 1994, 2001 காலப்பகுதியில் இருந்த ஒழுங்கு விதிமுறை ோடு சேர்த்து கடைப்பிடிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. அண்மைக்காலமாக சனாதிபதி மாளிகையை நோக்கியும், அதற்கு சமீபமாகவும் ஆர்ப்பாட்டங்கள் பேரணிகள் என்பன ஒழுங்கு செய்யப்பட்டிருந்ததையடுத்தே இந்த பாதுகாப்பு ஒழுங்குவிதிகள் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன.

சனாதிபதி மாளிகையை அண்மித்த பகுதிகள் அதியுயர் பாதுகாப்பு, வலயமாக பிரகடனப்படுத்துவதற்கான வர்த்தமானி அறிவிப்பு கடந்த வெள்ளியன்று வெளியிடப்பட்டது. இந்த அதியுயர் பாதுகாப்பு வலய பிரகடனம் ஒரு வருட காலத்திற்கு அமுலில் இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (32)

# தெல்லிப்பழை சோதனை நிலையம் படையினரால் முன்நகர்த்தல்

(யாழ்ப்பாணம்)

உயர் பாதுகாப்பு வலயத்தில் அமைந்துள்ள தெல்லிப்பழை சோதனை நிலையங்கள் கடந்த 15ஆம் திகதி முதல் முன் நகர்த்தப்பட்டுள்ளன.மாவிட்டபுரம் கந்தசாமி ஆலய வருடாந்த உற்சவம் இடம்பெற்று வரும் இவ் வேளையில் இச் சோதனை நிலையங்கள் முன் நகர்த்தப்பட்டுள்ளமை பொதுமக்களிடையே அச்ச உணர்வை ஏற்படுத்தியுள்ளது.

முன்னர் சோதனை நிலையம் இருந்த இடத்தில் இருந்து சுமார் 50 மீற்றர் தூரத்திற்கு முன்நகர்த்தப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும். இதனைத் தொடர்ந்து முன்னரங்க காவல் நிலைகளும் கூட முன் நகர்த்தப்பட்டுள்ளதுடன் பொது மக்களும் மற்றும் ஊழியர்களும் கடுமையான சோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டே உள்ளே செல்ல அனுமதிக்கப்பட்டு வருகின்றார்கள். (41)

## -திருமலை புத்தர்சிலை விவகாரம்-

# மனு ஒன்றை விலக்கிக்கொள்ள சட்டமா அதிபர் தீர்மானம்!

(திரு ாணமலை)

திருகோணமலை புத்தர்சிலை விவகாரம் தொடர்பில் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனு ஒன்றை தொடர் ும் விசாரணை செய்வதில்லை என உயர் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

குறித்த புத்தர்சிலையை அகற்றுவதற்கு திருகோணமலை நகர சபைக்கு உத்தரவிடவேண்டும் எனக்கோரி சட்ட மா அதிபர் திருகோணமலை நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தமையானது அடிப்படை உரிமை மீறல் என தீர்ப்பளிக்க வேண்டும் எனக்கோரி சீனன்குடா விஹாரையின் பிக்கு பியதிஸ்ஸ தேரர் உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தார்.இந்த நிலையில் மனுதாரரின் வாதத்தை நீதியரசர்கள் ஏற்றுக்கொண்டதை அடுத்து சட்டமா அதிபர் திருகோணமலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள மனுவை தாம் விலக்கிக் கொள்வதாகத் தெரிவித்தார்.

இந்த நிலையில் குறித்த மனுவை இரத்துச்செய்வதென உயர் நீதிமன்றம் தீர்மானித்தது.

இதேவேளை மன்றில் கருத்துரைத்த பிரதமநீதியரசர் சரத் என் சில்வா குறித்த புத்தர் சிலை விவகாரத்தில் சுயாதீன முடிவை எடுக்க திருகோணமலை நகர சபைக்கு உரிமையுள்ளதாக தெரிவித்தார்.(32)

# சிறிலங்கா இராணுவ பாதுகாப்பு முன்னரண்கள் நாகர்கோவிலில் பலப்படுத்தப்பட்டுள்ளன

## – இராணுவ அதிகாரி சிங்கள நாளேட்டுக்குத் தகவல்

(கொழும்பு)

நாகர்கோவிலில் சிறிலங்கா இராணுவப் பாதுகாப்பு முன்னரண்கள் பலப்படுத்தப்பட்டுள்ளதாக இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்ததாக சிங்கள நாளேடு ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

யாழ். நாகர்கோவில் பாதுகாப்பு முன்னரங்குகளில் இருக்கும் பதுங்கு குழிகளுக்கு சுமார் மூவாயிரம் விடுதலைப்புலி உறுப்பினர்கள் கடந்த சனி இரவு முதல் வந்துள்ளதாக படைத்தரப்பு தரப்பிற்குத் தகவல்கள் கிடைத்துள்ளதென நேற்றைய சிங்கள நாளேடொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப்புலி உறுப்பினர்கள் தங்களது நிர்வாகத்தில் உள்ள பளை மற்றும் மருதங்கேணி ஆகிய பிரதேசங்களிலிருந்து நாகர்கோவில் பாதுகாப்பு முன்னரங்குகளுக்கு வந்திருப்பதாகவும் அந்தத் தகவல் கூறுகிறது.

சுமார் மூவாயிரம் போராளிகள் பத்துக் குழுக்களாகப் பிரிந்து நாகர்கோவில் பாதுகாப்பு முன்னரங்குகளில் நிலைகொண்டுள்ளதாகத் தெரியவருவதாகவும் சிங்கள நாளேட்டுக்குத் தகவல் அளித்த இராணுவ அதிகாரி கூறியுள்ளார்.

# முச்சக்கரவண்டித் திருட்டு வவுனியாவில் அதிகரிப்பு

(செட்டிக்குளம்)

வவுனியாவில் நேற்றும் இரண்டு முச்சக்கரவண்டிகள் கடத்த முயற்சிக்கப்பட்டதாகவும், இதில் ஒரு முச்சக்கரவண்டி கடத்தப்பட்டு இருப்பதாகவும் வவுனியா பொலிசார் தெரிவிக்கின்றனர். வவுனியா மடுகந்தப் பகுதியில் மேற்படி சம்பவம் இடம்பெற்றுள்ளது பூட்டப்பட்டு இருந்த வீட்டின் வளவினுள் புகுந்த கொள்ளையர்கள் வீட்டுவாயிற் கடவையைத் திறக்காமலே வேலிக்கு மேலால் தூக்கி முச்சக்கரவண்டியினைக் கொண்டு சென்று இருப்பதாகவும் இவ்வாறு கொண்டு செல்லப்பட்ட முச்சக்கர வண்டியில் ஒன்று எரிபொருள் தீர்ந்ததன் காரணமாக வீதியில் நிறுத்தி விட்டு மற்றைய முச்சக்கர வண்டியினைக் கொள்ளையர்கள் கொண்டு சென்று இருப்பதாகவும் பொலிசார் மேலும் தெரிவிக்கின்றனர். நீண்ட நாட்களாக வவுனியாவில் குறைந்திருந்த வாகனத் திருட்டு மீண்டும் அதிகரித்து இருக்கிறது. (21)

# ஆசிய பசுபிக் சனநாயகவாதிகள் சங்கத் தலைவராக ரணில் தெரிவு

(வோஷிங்டன்)

ஆசிய பசுபிக் பிராந்திய சனநாயகவாதிகளின் சங்கத் தலைவராக எதிர்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

அமெரிக்காவின் வோஷிங்டனில் நடைபெற்ற உலக சனநாயகவாதிகளின் கூட்டத்தில் இந்தத் தெரிவு மேற்கொள்ளப்பட்டது.

இந்த நிலையில் உலக சனநாயகவாதிகளது சங்கத்தின் அங்கமாகக் கருதப்படும் ஆசிய பசுபிக் சனநாயகவாதி சங்கத்தின் தலைவராக தெரிவு செய்யப்பட்டுள்ள ரணில் விக்கிரமசிங்க மேலும் சில நாட்கள் அமெரிக்காவில் தங்கியிருப்பார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை எதிர்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆசிய பசுபிக் சனநாயகவாதிகளின் சங்கத்திற்கு உறுப்பினர்களை அதிகரித்தல் மற்றும் ஏனைய அபிவிருத்திகள் குறித்த யோசனையை சமர்பித்துள்ளார்.

உலக சனநாயகவாதிகள் சங்கத்தின் தலைவராக அவுஸ்திரேலிய பிரதமர் ஜோன் ஹவார்ட் பணியாற்றுகின்றமை குறிப்பிடத்தக்கது. (32)

## வடமராட்சி...

போராளிகள், பொதுமக்கள் என ஐயாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் கலந்துகொண்ட பேரணி கோசங்களுடன் தாளையடி பொதுவிளையாட்டு மைதானத்தைச் சென்றடைந்தது.

மேற்படி பேரணிக்கூட்டம் கட்டைக்காடு ஊரக மேம்பாட்டுத் தலைவர் சு.முத்துராசா தலைமையில் இடம்பெற்றது. தலைமையுரையினைத் தொடர்ந்து வடமராட்சி கிழக்கு போர் எழுச்சிக்குழுத்தலைவர் ஜெயபாலகிஸ்ணனால் தமிழீழ தேசியத்தலைவர் அவர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்ட மகஜர் இப்பேரணியில் கலந்து கொண்ட போராளிகள், பொதுமக்கள் மத்தியில் வாசிக்கப்பட்டது.

தொடர்ந்து தேசியத்தலைவருக்கான மகஜர் கடற்படையின் யாழ்.மாவட்ட தளபதி கலாத்தனிடம் கையளிக்கப்பட்டது. (தீகா)

## சிறிலங்கா...

அமைச்சரவை அதிகாரமற்ற அமைச்சராக பதவியேற்றார்.

ஜெகத் புஸ்பகுமார விவசாயத்துறை பிரதி அமைச்சராக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

திலான் பெரேரா பிரதி ஊடகத்துறை அமைச்சராக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

ஜயரட்ன ஹேரத் சுகாதார நலன், மற்றும் போசனை ஊவா வெல்லச அபிவிருத்தி பிரதி அமைச்சராக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

பிரேம்லால் ஜயசேகர நீர்வடிகால் மற்றும் மகாவலி,ரஜரட்ட அபிவிருத்தி பிரதி அமைச்சராக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

சந்திரசிறி கஜதீர கடற்றொழில் நீரியல்வள பிரதி அமைச்சராக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

மேவின் சில்வா தொழிலாளர் நலன் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்புத்துறை பிரதி அமைச்சராக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார். (32)

## தமிழ்...

தொடர்ந்து நிகழ்வின் முக்கியத்துவம் பற்றி தென்மராட்சி பொது அமைப்புக்களின் ஒன்றியத்தைச் சேர்ந்த அருந்தவபாலன் சபைக்கு எடுத்துக் கூறினார். அடுத்தமாதம் முதல் வாரத்தில் இருந்து பொது மக்கள் இப்போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வதன் மூலமே தமிழ் மக்களின் உண்மையான உணர்வுகளை வெளி உலகத்திற்கு வெளிப்படுத்த முடியும் ஆகவே இதற்கான வேலைத் திட்டங்களை முழுமையாக அனைவரும் இணைந்து செயற்படுத்த வேண்டும் என்ற தீர்மானத்தை அனைவரும் ஏகமனதாக ஏற்றுக் கொண்டனர். இதனடிப்படையில் சர்வதேசத்திற்கு பின்வரும் கோரிக்கைகளை முன் வைப்பதென தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தமிழ் மக்கள் மீது நன்கு திட்டமிட்ட முறையில் சிங்களப் பேரினவாத அரசினால் திணிக்கப்படும் யுத்தத்தை தவிர்க்கும் பொறுப்பு சர்வதேச சமூகத்திற்கு உரியதாகும்.

தமிழ் மக்களை தன்னாட்சி சுயநிர்ணய உரிமைகளுடன் வாழ்வதற்கும் தமது அடிப்படை உரிமைகளைப் பெறுவதற்கும் இயல்பு வாழ்க்கையை நிலைபெறச் செய்வதற்கும் சர்வதேச நாடுகளே பொறுப்பாகும் என்பதை சர்வதேச சமூகத்திற்கு உணர்த்தும் முகமாக மக்கள் போராட்டங்களை பரந்த முறையில் முன்னெடுப்பதென தீர்மானிக்கப்பட்டுள்ளது. (41)

## பருத்தித்துறை...

இத்தகைய அடாவடித்தனமான நடவடிக்கைகளை திட்டமிட்ட முறையில் இராணுவத்தினர் தொடர்ச்சியாக வடக்கு கிழக்கில் மேற்கொண்டு வருகின்ற போதிலும், அரசும் இராணுவ உயர் அதிகாரிகளும் மௌனம் காட்டி வருகின்றமை தமிழ் மக்கள் மத்தியில் பல்வேறு சந்தேகங்களுக்கும் இட்டுச் செல்கி து.

அரசினுடைய பின்னனியில் தான் அரச படைகள் இத்தகைய வேண்டத்தகாத செயற்பாடுகளில் ஈடுபடுகின்றார்கள் என தெரிவிக்கப்படுகின்றது. (41)

## யுத்த...

தலைவர் ஹக்ரப் ஹொக்லண்ட் நேற்று சந்தித்துப்பேசினார்.

தமிழர் தாய ந்தில் சிங்கள இராணுவ ஆக்கிர ப்பு பகுதிகளில் தமது சொந்தப் பாதுகாப்புடன் பயணம் மேற்கொள்ளப்படும் என்று கடந்த வெள்ளிக்கிழமையன்று தமிழீழ விடுதலைப்புலிகள் இறுதி அறிவித்தலை விடுத்திருந்தனர். இது குறித்து இச் சந்திப்பில் விவாதிக்கப்பட்டதாக தெரிகிறது.

## வவுனியாவில்....

ரம் ஆயுதக்குழுக்கள் ஆயுதத்தினை வைத்திருக்க முடியாது என்று குறிப்பிடப்பட்டு இருக்கின்ற போதும், வவுனியாவில் மீண்டும் ஆயுதக்குழுக்கள் ஆயுதத்துடன் நடமாடுவது தொடர்பாக தாம் விபரங்களை பெற்றிருப்பதாகவும் இதனை போர் நிறுத்த கண்காணிப்புக் குழு இராணுவத்தினரின் வனத்திற்கு கொண்டு வந்து இதனை கட்டுபடுத்துமாறும் கோரியுள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் தலைமையும் அரசியல் போராளிகளும் போர் நிறுத்தத்தினை சரியான முறையில் கடைபிடித்து வருவதாகவும், இதே போன்று எதிர்காலத்திலும் கடைபிடிப்பதற்கு விரும்புவதாகவும் ஆனால் வவுனியாவில் இந்த சூழ்நிலையை இல்லாது செய்வதற்கு சில சக்திகள் மறைமுகமாக செயற்படுவதாகவும் குற்றம் சாட்டியுள்ளார்.

இராணுவத்தினரும் தமது செயற்பாடுகளை தற்போது வவுனியாவில் அதிகரித்து இருப்பதாகவும் இதே போன்று ஆயுதக் குழுக்களின் நடமாட்டம் அதிகரித்தால் அரசியல் பணியினை தம்மால் சரியான முறையில் முன்னெடுத்து செல்ல முடியாமல் போய்விடும் என்றும், எனவே இதனை கட்டுப்படுத்த போர்நிறுத்த கண்காணிப்பு குழுவினர் சரியான முறையில் நடவடிக்கை எடுப்பது இன்றியமையாதது என்றும் அவர் தெரிவித்தார்.

தற்போது திருகோணமலையில் ஏற்பட்டு இருக்கின்ற நிலைமைகள் தொடர்பாகவும் இந்தச் சந்திப்பில் பேசப்பட்டதாகவும் வவுனியா மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் மேலும் தெரிவித்தார். (21,10)

## கருத்துப்படங்கள்

**வாசகர்களிடமிருந்து கருத்துப்படங்கள் வரவேற்கப்படுகின்றன. தரமான கருத்துப் படங்கள் ஈழநாதம் நாளேட்டில் பிரசுரிக்கப்படும்.**

அனுப்ப வேண்டிய முகவரி:
**பிரதம ஆசிரியர்,**
**ஈழநாதம், கிளிநொச்சி.**

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு யூலை மாதம் 19 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.